விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 018 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 21 சனிக்கிழமை (06.01.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## 13ஆவது திருத்தச் சட்டத்தின் அதிகாரங்களை மாகாண அபிவிருத்திக்கு பயன்படுத்துங்கள்

### மத்திய அரசு அதில் தலையிடாது – ஜனாதிபதி



(யாழ்ப்பாணம்)

13ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள அதிகாரங்களை மாகாண அபிவிருத்திக்குப் பயன்படுத்துங்கள். மத்திய அரசு அதில் தலையிடாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தொழில் வல்லுனர்களுடனான சந்திப்பின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

மாகாண மட்டத்தில் வலுவான பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் மூலம் வழங் 15

## இலங்கையில் முதல் முறையாக திருகோணமலையில் ஜல்லிக்கட்டு

(திருகோணமலை)

பொங்கல் விழாவை முன்னிட்டு இலங்கையில் முதல் முறையாக இன்று திருகோணமலையில் ஜல்லிக்கட்டுப் போட்டி நடைபெறவுள்ளது.

இதன்படி இன்று காலை 10 மணிக்கு 15

## யாழ்.பல்கலை மாணவர்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையேயான கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. 02

## அடுத்த 5 வருடங்களில்

# வடக்கு முழுமையாக அபிவிருத்தி செய்யப்படும்

### வவுனியாவில் ஜனாதிபதி ரணில் உறுதி



(வவுனியா)

அடுத்த 5 வருடங்களில் வட மாகாணம் முழுமையாக அபிவிருத்தி செய்யப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியாக தெரிவித்துள்ளார். *(15ஆம் பக்கம் பார்க்க)*

## தமிழர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை

### கலாநிதி ஆறு.திருமுருகன்



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் கோரிக்கைகள் மற்றும் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை என இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்துள்ளார். 05

## ஜனாதிபதியைச் சந்திக்க அனுமதிக்குமாறு உறவுகள் வவுனியாவில் போராட்டம்

### இருவர் பொலிஸாரால் கைது



(வவுனியா)

ஜனாதிபதியைச் சந்திக்க அனுமதிக்குமாறு வவுனியாவில் போராட்டம் நடத்திய காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் இருவர் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் 15

## வரி அதிகரிப்புக்கு எதிராக கொழும்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்



02

## பூநகரியின் அபிவிருத்தியை உடன் துரிதப்படுத்துக

### கண்காணிப்பு விஜயத்தின்போது ரணில் பணிப்பு



15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காடு டச்சு வீதியில் GPS Lane அருகாமையில் 6 பரப்புக் காணி இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு. 20 அடிப்பாதையுடன் மெயின் றோட் முகப்புடன் உண்டு.

தரகர் தேவையில்லை.

பார்வையிடும் நேரம் : 6.00am - 6.00pm வரை

(18516)

**076 755 8606**
**077 874 3204**


## வரி அதிகரிப்பு...

வரி அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பு, இராஜகிரியவில் நேற்று வெள்ளிக் கிழமை (5) ஆர்ப்பாட்டமொன்று முன்னெ டுக்கப்பட்டது.

தேசிய மக்கள் சக்தியினால் குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது (ம-7)

## யாழ். பல்கலை...

நேற்று வெள்ளிக்கிழமை மாலை யாழ்ப் பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் குறித்த கலந்துரையாடல் நடை பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் சிரேஸ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, யாழ்ப்பாணப் பல் கலைக்கழக துணைவேந்தர் சிரேஸ்ட பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குண ராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாண வர் ஒன்றிய பிரதிநிதிகளும் இக் கலந்துரையாட லில் கலந்துகொண்டனர்.

இதன்போது மாணவர்கள் எதிர்கொள் ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதி பதிக்கு சுட்டிக் காட்டப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 37 மாணவர்கள் இந்தக் கலந்துரையாட லில் பங்கேற்றனர். (ம-7.33)


## வேலையாள் தேவை

பளையில் உள்ள தென்னந்தோட்டத்தில் தங்கிநின்று பராமரிப்பதற்கு வேலையாள் (ஆண்) தேவை.

வயது 40 இற்கு மேல்

தனி நபர்களுக்கு முன்னுரிமை

**075 719 0110**

## சமையலாளர்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் ஹோட்டல் ஒன்றிற்கு தகைமையும் விருப்பமும் உடைய சமையலாளர்கள் தேவை.

- பிரியாணி சமையலாளர்
- மதிய உணவு (சோறு கறி - அசைவம்)
- பரோட்டா மாஸ்டர்

(18517)

**077 214 1214**

## காணி விற்பனைக்கு

நிலப்பரப்பு

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் பருத்தித்துறை வீதி பிரதான முகப்புடன் அமைந்துள்ள 4 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (17761)

**077 077 4919**

## ஆசிரியர் பதவி வெற்றிடம்

வடமராட்சியில் இயங்கும் கல்வி நிலையம் ஒன்றுக்கு கணிதம், விஞ்ஞானம், வரலாறு, சுகாதாரம், புவியியல், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர் தேவை. (C-8084)

**077 087 2903**
**075 087 2903**


## மரண அறிவித்தல்

தோற்றம் 25 - 05 - 1953



மறைவு 03 - 01 - 2024

### சுப்பிரமணியம் சிவராசா

( நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்க ஓய்வுபெற்ற சாரதி )
(MPCS)

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி, பாற்பண்ணை விதியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவராசா அவர்கள் கடந்த 03.01.2024 ( புதன்கிழமை ) அன்று காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் சிவமலர் அவர்களின் அன்புக் கணவரும் கந்தசாமி (இந்தியா), சண்முகராசா, வேலாயுதபிள்ளை (கனடா), காலஞ்சென்ற மயில்வாகனம், இராசரத்தினம் (கனடா), செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சசிதரன் (கனடா), சசிகலா, சுதாகரன் (கனடா), சுரேஸ்கரன், கஜேந்திரன், தேவரூபி (ஜேர்மனி), தேவரூபன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சசிகுமார், சுதர்சன் (ஜேர்மனி), குலரஞ்சினி, விஜிதா, ஜெயபவாணி, சோபிகா, மதுசனா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஷர்மிகா, கிஷாளினி, சாதுரியன், டிலக்சனா, பிரகாஸ், டக்சிகா, ஜன்சிகா, அபிசன், சஞ்சனா (ஜேர்மனி), சகானா, பிரணவன் (ஜேர்மனி), யதுசன், பிரபஞ்சனா (ஜேர்மனி), டர்மி, அஸ்மிதா, அக்சயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் நாளை (07.01.2024) ஞாயிற்றுக் கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று காலை 10.00 மணியளவில் அன்னாரின் பூதவுடல் தகனத்திற்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

077 471 0678
077 605 5638 (18520)

தகவல்:
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியில் பணியாற்றும் திருமதி **தேவகி யோகராசா** அவர்களின் பாசமிகு தந்தை

### அமரர் கந்தையா மாணிக்கவாசகர்

அவர்கள் நேற்று (05.01.2024) வெள்ளிக்கிழமை அன்று காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(18508)

நலன்புரிக் கழகம்
யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி

## கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய (புதுக்கோவில்) கோவில் ஆரம்பகால தொண்டனும் பொதுச் சபை உறுப்பினரும் நிர்வாக சபை உறுப்பினருமாக கடமையாற்றிய

### அமரர் கந்தையா மாணிக்கவாசகர்

தோற்றம் : 09.09.1954
மறைவு : 05.01.2024

அவர்கள் காலமான செய்தி கேட்டு மிக கவலையடைகிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கிருபாகர சிவசுப்பிரமணியரை வேண்டுகின்றோம்.

(18511)

நிர்வாக சபை சார்பாக
கிருபாகர சிவசுப்பிரமணிய கோவில்
(புதுக்கோவில்) கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமையில் வாடும் மக்கள்

# இலங்கையில் அதிகரிப்பு

## புள்ளிவிபரவியல் திணைக்களம் தகவல்

**(கொழும்பு)**

**இலங்கையில் கடும் வறுமையில் வாழும் மக்களின் எண்ணிக்கை ஐம்பத்து ஐந்து இலட்சமாக அதிகரித்துள்ளது.**



பொருளாதார நெருக்கடி மற்றும் வரிச்சுமை காரணமாக கடுமையான வறுமையில் வாடும் மக்களின் எண்ணிக்கை

இவ்வாறு அதிகரித்துள்ளது என தொகை மதிப்பீட்டு புள்ளி விபரவியல் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டில் வறு மைக் கோட்டுக்கு கீழ் வாழ்ந்த மக்களின் எண்ணிக்கை 25 இலட்சமாக காணப் பட்டது. இது மொத்த சனத் தொகையில் 11.9 சதவீதம் என்பதுடன் தற்பொழுது இந்த எண்ணிக்கை 25 சதவீதமாக அதிகரித் துள்ளது. சமுர்த்தி, அஸ்வெசும போன்ற நலன் புரித் திட்டங்களை வழங்க வேண் டியவர்களின் எண்ணிக்கை 25 வீதமாக உயர்வடைந்துள்ளது. எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட சுமார் 80 பண்டங்களுக்கு பெறுமதி சேர் வரி அறவீடு செய்யப்படுவதனால் வறிய மக்களின் எண்ணிக்கை வெகுவாக உயர்வடைந்துள்ளது.

வறிய மக்களின் எண்ணிக்கை மேலும் உயர்வடையக்கூடும் என தொகை மதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. மூன்றாண்டு காலப்பகுதியில் நாட்டின் வறிய மக்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## விசேட டெங்கு தடுப்பு வாரம் நாளை முதல் ஆரம்பம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில், நாளை முதல் 13 ஆம் திகதி வரை விசேட டெங்கு தடுப்பு வாரத்தைப் பிரகடனப்படுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதுகுறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர டெங்கு நோயாளர்கள் கணிசமான அளவில் அதிகரித்துள்ள நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

முப்படையினர், சுகாதார அதிகாரிகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பணியாளர்களுடன் இணைந்து இந்த வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படும் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார். (நி-5-6)

## சீமெந்து விலை அதிகரிப்பு

(கொழும்பு)

பெறுமதி சேர் வரி உயர்வால், சீமெந்து மூடையின் விலை 150 ரூபாவிற்கும் 350 ரூபாவிற்கும் இடைப்பட்ட தொகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக சீமெந்து உற்பத்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விலை உயர்வின் மூலம் சில சீமெந்து நிறுவனங்களில் 50 கிலோ கிராம் எடையுள்ள சீமெந்து மூடையின் விலை 2,300 ரூபாவாகவும், மற்றொரு நிறுவனத்தில் சீமெந்து மூடையின் விலை 2,450 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வரி உயர்வுக்கு முன் சில நிறுவனங்களில் சீமெந்து மூடையின் விலை 1,980 ரூபாவாகவும், சில நிறுவனங்களில், சீமெந்து மூடையின் விலை, 2,300 ரூபாவாகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# கொவிட் தடுப்பூசியால் பாதிப்பில்லை

## விசேட வைத்திய நிபுணர் விஜேவிக்ரம

(கொழும்பு)

கொவிட் தடுப்பூசியினால் பாதிப்பு ஏற்படுவதாக வெளிவரும் செய்திகளில் உண்மையில்லை என விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

கொவிட் தடுப்பூசியைச் செலுத்திக் கொண்டவர்களுக்கு பல்வேறு நோய்கள் ஏற்படுவதாக அண்மைக்காலமாக சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியாகி வருகின்றன.

இந்நிலையில் இவ்விடயம் குறித்துக் கருத்துத் தெரிவித்த விசேட வைத்திய நிபு ணர் ஆனந்த விஜேவிக்ரம கொவிட் தடுப்பூசியை செலுத்திக் கொண்டவர்களுக்கு பல்வேறு நோய்கள் ஏற்பட்டு வருவதாக வெளிவரும் செய்திகள் விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்தப்படவில்லை எனத்தெரிவித்துள்ளார். (நி-5-6)



## ஜோர்தானில் சிக்கியுள்ள சுமார் 250 இலங்கையர்கள்

(ஜோர்தான்)

ஜோர்தானில்உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் இலங்கையர்கள் சிலர், தம்மை மீண்டும் இலங்கைக்கு அழைத்துவருவதற்கு இலங்கை அரசாங்கம் தலையிட வேண்டுமென வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சுமார் 250 இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் குறைந்த பட்ச வசதிகள்கூட இன்றி பலவந்தமாக அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் தமக்கு அதிகாரிகள் உரிய சம்பளத்தை வழங்குவதில்லை எனவும், இலங்கைக்கு மீள வருவதற்கு இடமளிப்பதில்லை எனவும் பாதிக்கப்பட்டவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி-5-6)

## ஐ.எம்.எப் பிரதிநிதிகள் இலங்கை விஜயம்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று எதிர்வரும் 11 ஆம் திகதி நாட்டிற்கு விஜயம் செய்யவுள்ளது.

இந்த விஜயத்தின் போது நாட்டின் பொருளாதார நிலைமையை குறித்து ஆராயப் படவுள்ளது.

இலங்கைப் பொருளாதாரத்தின் அண்மைக்காலப் போக்குகள் மற்றும் தற்போதைய பொருளாதார சீர்திருத்தங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து மதிப்பிடுவதை நோக்கமாக கொண்டே நிதியமைச்சு இந்த விஜயத்தை உறுதிப்படுத்தியுள்ளது. (நி-5-6)

# செய்தித்துளிகள்

## மசகு எண்ணெய் விலையில் வீழ்ச்சி

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் நேற்றைய தினம் மசகு எண்ணெயின் விலை வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

இதன்படி WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 72.23 அமெரிக்க டொலராக வீழ்ச்சியடைந்துள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 77.59 அமெரிக்க டொலராக நிலவுகிறது.

இதேவேளை இயற்கை எரிவாயுவின் விலை 2.79 அமெரிக்க டொலராக வீழ்ச்சியடைந்துள்ளது. (நி-5-6)

## கோரவிபத்தில் சிறுமி பலி

(கொழும்பு)

ஹலவத்தையிலிருந்து கொழும்பு நோக்கி சென்ற மோட்டார் சைக்கிள் மீது கொள்கலன் பாரவூர்தி மோதியதில்13 வயது சிறுமி உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு நீர்கொழும்பு கட்டுவா பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சிறுமியின் தாயும் காயமடைந்து நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். மேலும் விபத்து தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-5-6)

## விசேட நடவடிக்கையில் 1,184 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட நடவடிக்கையின் கீழ் நேற்று அதிகாலை 12.30 உடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 1,184 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அவர்களில் 59 பேர் தடுப்புக் காவல் உத்தரவில் வைக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பில் 23 சந்தேகநபர்கள் விசாரனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் போதைப் பொருளுக்கு அடிமையான 49 பேர்புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (நி-5-6)

## போதைப்பொருளுடன் அறுவர் கைது

(கொழும்பு)

தென் கடற்பரப்பில் படகொன்றில் போதைப் பொருட்களை கடத்திச் சென்ற 6 சந்தேகநபர்கள் நேற்று வெள்ளிக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்படை மற்றும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரின் கூட்டு நடவடிக்கையினூடாக இந்தப் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட இழுவைப் படகு நேற்று காலை காலி துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை இலங்கை கடற்படை மற்றும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# 2 ஆவது டெஸ்டில் இந்தியா அசத்தல்

# சமநிலையான டெஸ்ட் தொடர்



தென்னாபிரிக்கா அணிக்கெதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் இந்தியா அபார வெற்றிபெற்று டெஸ்ட் தொடரை சமன் செய்தது.

2ஆவது டெஸ்ட் போட்டி கேப்டவுன் நியூலேண்ட்ஸ் மைதானத்தில் கடந்த புதன்கிழமை தொடங்கியது. டாஸ் வென்ற தென்னாபிரிக்கா பட்டிங் தேர்வு செய்தது.

அதன்படி முதல் இன்னிங்ஸ் ஆடிய தென்னாபிரிக்கா சிராஜ் பந்துவீச்சில் சிக்கியது. இறுதியில் தென் ஆபிரிக்கா 23.2 ஓவரில் 55 ரன்களுக்கு ஓல் அவுட்டானது.

இதையடுத்து, இந்திய அணி முதல் இன்னிங்சில் களமிறங்கியது. விராட் கோலி 46 ரன்னும், ரோகித் சர்மா 39 ரன்னும், சுப்மன் கில் 36 ரன்னும் எடுத்தனர். 7 வீரர்கள் டக் அவுட்டாகினர். இறுதியில் இந்திய அணி முதல் இன்னிங்சில் 153 ரன்களுக்கு ஓல் அவுட்டானது.

தென்னாபிரிக்கா சார்பில் ரபாடா, பர்கர், நிகிடி ஆகியோர் தலா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

98 ரன்கள் பின்தங்கிய நிலையில் தென்னாபிரிக்கா அணி 2 ஆவது இன்னிங்சை தொடர்ந்தது. முதல் நாள் முடிவில் தென் ஆபிரிக்கா அணி 2ஆவது இன்னிங்சில் 3 விக்கெட்டுக்கு 62 ரன்கள் எடுத்திருந்தது.

இந்நிலையில், இரண்டாம் நாள் ஆட்டம் நேற்றுமுன்தினம் தொடங்கியது. இந்திய பந்து வீச்சாளர்களின் அபாரமான பந்து வீச்சால் தென் ஆபிரிக்கா 2ஆவது இன்னிங்சில் 176 ரன்களுக்கு ஓல் அவுட்டானது. மார்கிரம் அதிரடியாக ஆடி ரன்களைக் குவித்து சதமடித்து 106 ரன்னில் அவுட்டானார்.

இதையடுத்து, 79 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி 2ஆவது இன்னிங்சில் 3 விக்கெட் இழப்புக்கு 80 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. டெஸ்ட் தொடரை 1-1 என சமனிலையில் முடித்தது. (நி-5-6)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3010


### திபானுஜன்




### லிபானுஜா




### ஆதிரை




### கரன்




### சியாந்தன்




### ஆதவன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர் [illegible] பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹேரத் குமார கைது

(கொழும்பு)

சுகாதார சேவைகளின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் ஹேரத் குமார நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்த விவகாரம் தொடர்பில் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் சுகாதார அமைச்சின் வளாகத்தில் வைத்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். (நி-5-6)


## வாடகை வாகனத்திற்கான கூறுவிலை கோரல்
## CALLING QUOTATIONS FOR HIRING A VEHICLE

குடும்ப புனர்வாழ்வு நிலையமானது (FRC) முறையாக பதிவுசெய்யப்பட்டு இயங்கி வரும் ஒரு உள்நாட்டு தன்னார்வ தொண்டு நிறுவனமாகும். இந்நிறுவனம், வடமாகாணத்தில், கிளிநொச்சி அலுவலகத்தில் பணிபுரியும், பிராந்திய நிகழ்ச்சித்திட்ட முகாமையாளரின் உத்தியோகபூர்வ தேவைக்காக மகிழுந்து (கார்) ஒன்றினை வாடகைக்கு பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றது.

FRC நிறுவனமானது ஆர்வமுள்ள வாகன உரிமையாளரிடம் இருந்து வாடகை வாகனத்திற்கான கூறுவிலை கோரலை எதிர்பார்க்கின்றது. இக்கூறுவிலைக்கோரலிற்கு விண்ணப்பிக்கும் போது பின்வரும் விடயங்கள் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

- வாகனத்தின் வகை மற்றும் பதிவிலக்கம் (வாகனத்தின் முன், பின், பக்க மற்றும் உள்புகைப்படங்கள்)
- FRC யினால் மேற்கொள்ள எதிர்பார்க்கும் திருத்தங்களுக்கான அதிக பட்ச எல்லை.
- வாகன வருமானவரிப்பத்திரம், காப்புறுதி (முழு) மற்றும் வாகன நடத்துகை தொடர்பான விடயங்கள்.

அனைத்து கூறுவிலைக்கோரல் விண்ணப்பப்படிவங்களும் ed@frcsl.org எனும் மின்னஞ்சல் முகவரிக்கு, விடயம் எனும் பிரிவில் வாடகை வாகனங்களுக்கான கூறுவிலை கூறல் ("quotation for Hiring a Vehicle") என குறிப்பிட்டு 20.01.2024 இற்கு முதல் அனுப்பப்படல் வேண்டும்.

ஏதும் சந்தேகங்கள் அல்லது தெளிவுப்படுத்தல்கள் தேவைப்படின் பிராந்திய நிகழ்ச்சித்திட்ட முகாமையாளரை 077 730 0945 என்ற இலக்கத்துடன் அல்லது rc-north@frcsl.org எனும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

**நிறைவேற்றுப் பணிப்பாளர்,**
**குடும்ப புனர்வாழ்வு நிலையம்,**
**296/14 பார்க் வீதி,**


(18510)


# தமிழர்களின் பிரச்சினைகளுக்கு இதுவரை எந்த முடிவும் இல்லை

## கலாநிதி ஆறு. திருமுருகன் கோரிக்கை

**(யாழ்ப்பாணம்)**

**கடந்த வருடம் தைப்பொங்கல் தினத்தில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற சந்திப்பில் எம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் எவையும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை என அகில இலங்கை இந்துமாமன்ற உப தலைவர் கலாநிதி.ஆறு.திருமுருகன் கவலை வெளியிட்டார்.**



நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைத் தமிழர்களின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல்.

வடக்கு-கிழக்கில் இராணுவத்தின் பயன்பாட்டிலுள்ள பொதுமக்களின் நிலங்களை விரைவில் விடுவித்தல்.

கீரிமலை-காங்கேசன்துறை வீதியில் ஜனாதிபதி மாளிகை அமைப்பதற்காக அப்பகுதியில் உள்ள சைவ ஆலயங்கள், மடங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. மீளவும் அவ்விடங்களில் பொதுமக்கள் சென்று தமது வழிபாட்டு இடங்களை உரிய முறையில் பயன்படுத்த அனுமதிக்குமாறு வேண்டப்பட்டது.

காங்கேசன்துறை-பருத்தித்துறை வீதியில் இருந்து சுக்கிரவார திருகோணச்சத்திரம் இடிக்கப்பட்டு அந்நிலம் தல்செவன இராணுவ ஹோட்டல் பயன்பாட்டில் இருந்து மீளவும் சைவசமய மடம் அமைப்பதற்கு நிலத்தை கையளிக்க வேண்டும்.

கிளிநொச்சி இயக்கச்சி பகுதியில் பொதுமக்களின் காணிகள் பல இராணுவ முகாம்களாக உள்ளன. அவை எதுவும் மீளவும் பொதுமக்களிடம் கையளிக்கப்படவில்லை. அவற்றை கையளியுங்கள்.

போன்ற கோரிக்கைகள் ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்டன. ஒரு வருடம் கடந்த போதும் இவை நிறைவேற்றப்படவில்லை. எனவே இம்முறையேனும் மேற்படி கோரிக்கைகளை விரைந்து நிறைவேற்றுமாறு அவர் அவ் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# இராசிபலன்

**06.01.2024**
**மார்கழி 21, சனிக்கிழமை,**
**தசமி முன்னிரவு 9.49 மணிவரை**

**சுவாதி முன்னிரவு 6.59 மணிவரை**
**சுபநேரம் 3.31-5.01 மணிவரை**
**இராகுகாலம் 9.31-11.01 மணிவரை**

**அமிர்த சித்தம்**
**சந்திராஷ்டம்-**
**உத்திரட்டாதி, ரேவதி,**

**வளவன்**

**மேஷம்**
எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**ரிஷபம்**
உடல் நலன் சீராகும் ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், பொதுவாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும்.

**மிதுனம்**
சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வாகன யோகமுண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் கூடும், வழிபாட்டால் நன்மை காண வேண்டிய நாள்.

**கடகம்**
தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், பெற்றோர் மீது பிரியம் கூடும், பயணங்கள் கைகூடும்.

**சிம்மம்**
பணத்தேவைகள் திருப்தி தரும், நண்பர்களால் நன்மையுண்டு, நினைத்த காரியங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**கன்னி**
செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், உற்சாகமான நாள், வழிபாடு சிறப்பினைத்தரும்.

**துலாம்**
செலவுக்கேற்ப வருமானம் வந்து சேரலாம், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்**
தேவையற்ற அலைச்சல்கள் இடம்பெறலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் அதிக கவனம் தேவை, சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**தனுசு**
அதிஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**மகரம்**
பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் கைகூடும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.


**கும்பம்**
தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ஆரோக்கியத்தில் அக்கறை கூடும், பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**மீனம்**
கவலைகள் தீர கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், தேக நலனில் கூடிய அக்கறை காட்டுவீர்கள், கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம்.

**பல எண்ணங்கள் இறப்பின் ஒரு நல்ல எண்ணம் பிறக்கும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி-கைதடி கிழக்கு ஊற்றல் மயான வீதி புனரமைப்பு



(சாவகச்சேரி)

தென்மராட்சி-கைதடி கிழக்கு ஊற்றல் மயானத்திற்கு செல்லும் பிரதான வீதி அண்மையில் பிரதேச மக்களுடைய பங்களிப்போடு இளைஞர்களால் புனரமைக்கப்பட்டுள்ளது.

அதிக மக்களுடைய பயன்பாட்டில் உள்ள மேற்படி வீதியில் நீண்ட காலமாக பாரிய குழி காணப்பட்டு மாரி காலத்தில் போக்குவரத்திற்கு பெரும் சிரமம் ஏற்பட்டு வந்த நிலையில் பிரதேச மக்கள் இணைந்து மேற்படி முன்மாதிரியான செயற்பாட்டை முன்னெடுத்துள்ளனர்.

மாரி காலத்தில் குறித்த வீதி ஊடாக போக்குவரத்து செய்ய முடியாத நிலை காணப்பட்டதால் கைதடி இராசபுரி, கலைநகர் மற்றும் பண்டகவயல் பகுதி மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதனைத் தவிர்த்து வந்த நிலையிலேயே பிரதேச மக்கள் இணைந்து முதற்கட்டமாக 50மீற்றர் நீளமான சேதமடைந்த வீதிப் பாகத்தை புனரமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-30)

# யாழ்.நகர் பகுதியில் விசேட டெங்கு தரிசிப்பு

## 8 பேருக்கு வழக்குத் தாக்கல்


(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் பொது சுகாதார பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட கொட்டடி கிராமத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து நேற்று யாழ்நகர் பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவன் தலைமையில் கிராம சேவை உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் குறித்த பகுதியில் உள்ள வீடுகளில் விசேட டெங்கு தரிசிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏதுவாக வளவினை வைத்திருந்த 12 பேருக்கு சிவப்பு அறிவித்தல்கள் வழங்கப்பட்டது.

அத்துடன் வீட்டுவளவுகளில் டெங்கு நுளம்பு குடம்பிகளை வைத்திருந்த 8 பேருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்வதற்கு பொது சுகாதார பரிசோதகரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி-5-6-33)



# கைதானவர்கள் பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழிற்கு விஜயம் செய்த ஜனாதிபதிக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நால்வரையும், பொலிஸ் பிணையில் பொலிஸார் விடுவித்துள்ளனர்.

மாவட்ட செயலகத்திற்கு முன்பாக ஜனாதிபதியின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்ட நால்வர் பொலிஸாரின் தடைகளை மீறி முன்னோக்கி செல்ல முற்பட்ட நிலையில் அவர்களை நேற்று முன்தினம் பொலி ஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நால்வரையும் யாழ்.பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் வாக்கு மூலத்தை பெற்றுக்கொண்டு அவர்களை பொலிஸ் பிணையில் விடுவித்துள்ளனர். (நி-5-6-33)

# கோண்டாவிலில் இளைஞன் மீது வாள்வெட்டுத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோண்டாவில் ஐயப்பன் ஆலயத்திற்கு அருகில் நேற்றுமுன்தினம் இரவு இளைஞன் மீது வாள் வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த வன்முறை கும்பல் ஒன்று இளைஞன் மீது வாள் வெட்டு தாக்குதலை மேற்கொண்ட பின்னர் , வீதியில் நின்ற முச்சக்கர வண்டி ஒன்றினையும் அடித்து உடைத்து சேதமாக்கிய பின்னர் அவ்விடத்தில் இருந்து தப்பி சென்றுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த இளைஞனை அங்கிருந்தவர்கள் மீட்டு மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் (நி-5-6-33)

# சிவில் சமூகப் பிரதிநிதிகளை யாழில் சந்தித்த ஜனாதிபதி



(யாழ்ப்பாணம்)

சிவில் சமூகப் பிரதிநிதிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் சந்தித்தார்.

யாழில் உள்ள தனியார் விடுதியில் இடம்பெற்ற சந்திப்பில் வடக்கு மாகாண ஆளு நர் பி.எஸ். எம்.சார்ள்ஸ், அமைச்சர் டக்ளஸ் தேவான ந்தா, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் உள்ளிட்டோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதில் யாழ்.மாவட்டத்தை சேர்ந்த பல சிவில் சமூகத்தின் அங்கத்தவர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-33)

# நிர்வாகசபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் இன்று சனிக்கிழமை பி.ப.1.30 மணிக்கு அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் சி.கா.கமலநாதன் தலைமையில் இல 610 கே.கே.எஸ்.வீதி இணுவில் அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சைவமாநாடும் பட்டமளிப்பு விழா, ஆய்வுக்கட்டுரை முன்வைப்பு, சைவநாதம் மலர் வெளியீடு, 2024 ஆம் ஆண்டுக்கான சைவப் புலவர், இளம் சைவப்புலவர் தேர்வுகள், சிவதீட்சை வழங்குதல் போன்ற முக்கியமான தீர்மானங்கள் கலந்துரையாடப்படவுள்ளதனால் அனைத்து செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப் புலவர் சங்கச் செயலாளர் சைவப் புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார். (நி-5-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 700 | 700 | 650 | 650 |
| உருளைக்கிழங்கு | 150 | 180 | 150 | 150 |
| பச்சைமிளகாய் | 1300 | 1300 | 1200 | 1600 |
| தக்காளி | 900 | 650 | 700 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 120 | 140 | 150 |
| கோவா | 450 | 600 | 550 | 600 |
| கரட் | 650 | 650 | 850 | 1000 |
| பூசணி | 140 | 180 | 160 | 200 |
| புடோல் | 320 | 320 | 220 | 300 |
| வாழைக்காய் | 220 | 220 | 180 | 300 |
| சின்ன வெங்காயம் | 400 | 400 | 450 | 500 |
| பெரிய வெங்காயம் | 400 | 450 | 450 | 500 |
| பாகற்காய் | 800 | 900 | 800 | 1000 |
| வெண்டக்காய் | 350 | 350 | 240 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 160 |
| பயற்றங்காய் | 500 | 350 | 750 | 400 |
| லீக்ஸ் | 450 | 450 | 450 | 600 |
| பீற்றூட் | — | 800 | 800 | 800 |
| கறிமிளகாய் | 800 | 700 | 600 | 800 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | 400 | 550 | 400 | 450 |
| கத்தரிதம்புள்ள | 650 | 600 | 400 | 600 |
| கீரை - 1 பிடி | 160 | 180 | 150 | 250 |
| தேசிக்காய் | 350 | 600 | 350 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 100 | 80-110 |
| இராசவள்ளி | 800 | 800 | 500 | 500 |
| வெங்காயப்பூ | 900 | 1200 | 800 | 1000 |
| முள்ளங்கி | 220 | 300 | 300 | 400 |
| பொன்னாங்காணி | 100 | 180 | 120 | 60 |
| வல்லாரை | 80 | 40 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 200 | 120 | 150 |

# சின்னமுத்து நோயாளர்கள் 80 பேர் யாழில் அடையாளம்

## தடுப்பூசி வழங்கல் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சின்னமுத்து நோயாளர்கள் 80 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். இதனைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் சுகாதார அமைச்சினால் விசேட சின்னமுத்து தடுப்பு மருந்தேற்றல் நிகழ்ச்சித்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்று காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை 6 மாதம் முதல் 9 மாதம் வரை வயதுடைய குழந்தைகளுக்கு தடுப்பூசி வழங்கும் நிலையங்களில் வைத்து தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் 71 தடுப்பூசி வழங்கும் நிலையங்கள் சுகாதார வைத்திய அதிகாரிகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாவது நாளாகத் தொடரும் மின்சார சபை ஊழியர்களின் போராட்டம்



(கொழும்பு)
இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான மின் உற்பத்தி நிலையங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கை மின்சார சபையின் அனைத்து தொழிற்சங்கங்களின் ஏற்பாட்டில் மூன்றாவது நாளாக நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பு கோட்டையில் உள்ள இலங்கை மின்சார சபை தலைமையகத்துக்கு முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நாடு முழுவதிலும் உள்ள இலங்கை மின்சார சபை ஊழியர்களில் பெரும் பாலானோர் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர். (நி-5-6)

## மின்சார சபை ஊழியர்கள்

# சமூக ஊடகங்களை பயன்படுத்த தடை விதிப்பு

(கொழும்பு)
இலங்கை மின்சார சபையின் ஊழியர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளரின் கையொப்பத்துடன் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

வாரியத்தின் எந்தப் பணியாளரும் எந்தக் காரணத்திற்காகவும் தனது அதிகாரபூர்வ அடையாளத்தையும் தகவலையும் சமூக ஊடகங்களுக்குப் பயன்படுத்த முடியாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் வாரியத்தின் இரகசிய தகவல்களை வெளியிடுவது, தவறான அல்லது அரசியல் அவதூறு விடயங்களை சமூக ஊடகங்களில் வெளியிடுவது ஆகியவை ஒழுங்கு விதிகளின்படி கடுமையான குற்றமாகும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்த சுழற்சிக்கு முரணாக செயற்படுபவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# சஜித்தைச் சந்தித்த நியூசிலாந்து உயர்ஸ்தானிகர்



(கொழும்பு)
தற்போதைய அரசாங்கம் மக்களை ஒடுக்கி அதிக வரி விதித்து, மக்களை இன்னலுக்குள்ளாக்கி இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் வைத்து இலங்கைக்கான நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் மைக்கேல் அப்பிள்டன் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற விசேட சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைக்கான நியூசிலாந்தின் உயர்ஸ்தானிகரான அப்பிள்டன் தனது பதவிக் காலத்தை நிறைவு செய்து நாடு திரும்பவுள்ள நிலையிலேயே இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதில் இரு தரப்பினருக்கும் இடையில் இலங்கையின் தற்போதைய சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகள் தொடர்பில் நீண்ட கலந்துரையாடலும் இடம்பெற்றது.

மேலும், வரி விதிக்காமல் அரச வருமானத்தை எவ்வாறு அதிகரிப்பது என்பது குறித்தும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நியூசிலாந்து உயர்ஸ்தானிகருக்கு விளக்கமளித்துள்ளார்.

அரசாங்கம் வேண்டுமென்றே மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறி தேர்தல் தொடர்ந்தும் ஒத்திவைக்கப்பட்டு வருகின்றமை குறித்தும் எதிர்க்கட்சித் தலைவர் இதன் போது விளக்கமளித்தார். (நி-5-6)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 18 கொழும்புத்துறை வீதியில் அமைந்துள்ள 581/25 இலக்க ஆதனமானது எமது ஆதனப்பதிவேட்டில் சொந்தக்காரர் என பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், கொழும்புத்துறையைச் சேர்ந்த யோசியாம்பிள்ளை டொமினிக் அல்லது யோசியாம்பிள்ளை அருள்நாயகம் டொமினிக் என்பவர் யாழ் நொத்தாரிசு S.P. நவரட்ணம் என்பவர் முகதாவில் 1979.03.19 ஆம் திகதி 412ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிப்படி சுண்டிக்குளி கோவிற்பற்று கொழும்புத்துறை இறையில் 'அமரக்கோன் முதலியார் காட்டுத்தலைமடையும் மறுபிரிவுகளும்' என்னும் பெயருடைய விஸ்தீரணம் நெற்பரப்பு 540 கொண்ட ஆதனத்தை குருநகர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சவரிமுத்து கிறிஸ்தோபரும் பெண் கெலனுக்கும் அறுதி விற்றுள்ளார்.

குறித்த ஆதனம் குருநகர் மத்தியகிழக்கு வீதியைச் சேர்ந்த திருமதி. றிச்சேட் கான்ஸ்போவர் எலிசபேத் குயின் என்பவர் நொத்தாரிசு அ.இராஜரட்ணம் என்பவர் முகதாவில் 2004.01.15ஆம் திகதி 2015ஆம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் சவரிமுத்து கிறிஸ்தோபர் காலமடைந்ததன் பின்னர் ஏகவாரிசான எனக்கடைந்த பிதாவழி முதுசமும் உரித்தும் எனதாட்சியுமானது என வெளிப்படுத்தியுள்ளார். குறித்த ஆதனம் றிச்சேட் கான்ஸ்போவர் அற்றோணி திருமதி. எலிசபேத் குயின் றிச்சேட் கான்ஸ்போவர் என்பவர் நொத்தாரிசு ஜெயசித்திரா சிறிதரன் என்பவர் முகதாவில் 2014.10.27ஆம் திகதி 2213ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் சாந்தகுமார் கிறோசன் பெண் விதுஸ்ரா றெனுசியாவிற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் சாந்தகுமார் கிறோசன் பெண் விதுஸ்ரா றெனுசியா என்பவர் நொத்தாரிசு மரியதாஸ் மகிழினி மடோனா என்பவர் முகதாவில் 21.01.2019ஆம் திகதி 222ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிப்படி நாகலிங்கம் இராஜகுலேந்திரம் பெண் ஜெயசிறி இராஜகுலேந்திரனிற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் நாகலிங்கம் இராஜகுலேந்திரம் பெண் ஜெயசிறி இராஜகுலேந்திரன் என்பவர் நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் என்பவர் முகதாவில் 27.04.2022ஆம் திகதி 14545ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிப்படி இராசேந்திரம் றெனிங்ஸம் பெண் மேரிதிரேசாவிற்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாண பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று, யாழ்ப்பாண மாநகர சபை யாழ்ப்பாணம் பிரதேச செயலகம், கிராம அலுவலர் பிரிவு J/61 கொழும்புத்துறை இறை. **"அமரக்கோன் முதலியார் காட்டுத் தலைமடையும் மறுபிரிவுகளும்"** என்று வழங்கும் **"கொழும்புத்துறைத் தெருத்தோட்டம்"** நிலப்பரப்பு 375 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.கனகசபையால் 12.03.2012 இல் 1 தொடக்கம் 10 துண்டுகளாக பிரிவிட்டு வரைந்த 4976/12ஆம் இலக்கத்தில் அளந்த நில அளவைப்படத்தின் படி நிலப்பரப்பு 376 குளி 12.8 இதில் ஏற்கனவே அறுதியாக விற்கப்பட்டது போக மிகுதி நிலப்பரப்பு 222 குளி 3.92 இதில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.கனகசபையால் 05.12.2014 இல் 6088A/14ஆம் இலக்கத்தில் அளந்த நில அளவைப்படத்தின் படி துண்டு 85 என சுட்டப்பட்ட நிலப்பரப்பு 1. இதனை அதே உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. கனகசபையால் 21.12.2014 இல் வரைந்த முறையே 6088A -85/14ஆம் இலக்கத்தில் தனியாக அளந்து வரைந்த நிலஅளவைப்படத்தில் துண்டு 1 எனச்சுட்டப்பட்டபடியும் விஸ்தீரணம் நிலப்பரப்பு(1) ஒன்றும் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும், இதன் எல்லை- (குறித்த 6088A 85/14 ஆம் இலக்க நிலஅளவைப்படத்தின்படி) .

கிழக்கு - குறித்த **6088Aம்** இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 84 எனச் சுட்டப்பட்ட ஆதனம்.
வடக்கு - குறித்த **6088Aம்** இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 82 எனச் சுட்டப்பட்ட ஆதனம்.
மேற்கு - குறித்த **6088Aம்**இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 86 எனச் சுட்டப்பட்ட ஆதனம்.
தெற்கு - குறித்த **6088Aம்** இலக்க நில அளவைப்படத்தில் காட்டப்பட்ட ஆறு மீற்றர் அகலப் பாதையும் இதடங்கலும் இன்னும் இவ்வாதனத்திற்கு தெற்கிலுள்ள ஆறு மீற்றர் அகலமுள்ள பாதையால் பிரதான வீதிக்குப் போக்குவரத்து செய்யுமுரித்தும்.

தற்போது இவ்வாதனத்தை இராசேந்திரம் றெனிங்ஸ் பெண் மேரிதிரேசா என்பவர் தனது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது இராசேந்திரம் றெனிங்ஸ் பெண் மேரிதிரேசா என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(சி-8086)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# 1330 தமிழ் எழுத்துகளால் உருவான வள்ளுவர் சிலை




(டில்லி)

இந்தியாவின் கோவையில் தமிழ் எழுத்துக்களால் உருவாக்கப்பட்ட திருவள்ளுவர் சிலையை நேற்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்துள்ளார்.

கோவை ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் ஒரு பகுதியாக குறிச்சிக்குளம் ஏரிக்கரை நுழைவாயிலில் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டுள்ளது.

இந்த சிலை 25 அடி உயரமும் 15 அடி அகலமும் 20 அடி நீளமும் 2.5 தொன் எடையும் கொண்டது. திருவள்ளுவரின் 1,330 திருக்குறளைப் போற்றும் வகையில், 1,330 தமிழ் எழுத்துக்களைக் கொண்டு இந்த சிலை உருவாக்கப்பட்டுள்ளது.

அதில் 247 எழுத்துக்கள் மீண்டும் மீண்டும் உபயோகிக்கப்பட்டுள்ளது. சிலையின் முன்பு திருவள்ளுவரின் முதல் குறளான "அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" என எழுதப்பட்டுள்ளது. (நி-5-6)

# வறட்சியால் பாதிக்கப்படும் கனேடிய மக்கள்

(ஒட்டாவா)


கடந்த ஆண்டில் கனேடிய மக்கள் வறட்சி காரணமாக பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

இதுதொடர்பாக, கனேடிய உணவு விவசாய திணைக்களம் இது தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட் டுள்ளது. அவ்வறிக்கையில், இவ்விடயம் தொடர்பாக மேலும் அறியத்தருகையில்,

"நாட்டில் கடந்த 2023 ஆம் ஆண்டில் 72 வீதமான பகுதிகளில் வழமைக்கு மாறாக குறைந்தளவு அளவு முதல் கடுமையான அளவிலான வறட்சி ஏற்பட்டுள் ளது.

வறட்சி காரணமாக கனடாவின் விவசாய நிலங்களே மிக அதிகளவில் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளது. குறைந்தளவு பனிப் பொழிவு மற்றும் மழைவீழ்ச்சி காரணமாக இந்த ஆண்டில் கனேடிய மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க நேரிடலாம்." என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

# ரஷ்யாவுக்கு ஏவ...
# வழங்கிய வ...
## குற்றம் சாட்டிய வெ...



**(வோஷிங்டன்) ...**
**உக்ரைனுக்கு ...**
**துவதற்காக வட...**
**ஏவுகணைகள் ...**
**வெள்ளை மாளி...**



இதுதொடர்பாக தேசிய பாதுகாப்பு செய்தித் தொடர்பாளர் ஜான் கிர்பி செய்தியாளர்களிடம் கூறுகையில்,

வடகொரியா ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் தடையை மீறியுள்ளதாகவும் இது கொரியத் தீபகற்பத்துக்கும் இந்தோ-பசிபிக் வட்டாரத்துக்கும் அது பாதுகாப்புச் சிக்கல்களை ஏற்படுத்தலாம் எனவும் பியாங்யாங் அதன் ஆதரவுக்குக் கைமாறாக மொஸ்கோவிடமிருந்து இராணுவ உதவியை நாடுவதாகத் தெரிகிறது எனவும் தெரிவித்தார்.

இந்த ஆயுத ஒப்பந்தங்களுக்கு உதவுபவர்களுக்கு எதிராக அமெரிக்கா கூடுதல் தடைகளை விதிக்கும்.

ஈரான் ரஷ்யாவிற்கு பாலிஸ்டிக் ஏவுகணைகளை வழங்கவில்லை. ஆனால் ஈரானிடம் இருந்து ஏவுகணை அமைப்புகளை

# ஈரான் குண்டுவெடிப்புத் தாக்குதலுக்கு உரிமை கோரியுள்ள ஐ.எஸ் அமைப்பு

(டெஹ்ரான்)

ஈரானில் அமெரிக்காவின் ஆளில்லா விமான தாக்குதலில் கொல்லப்பட்ட காசிம் சுலைமானியின் ஆண்டு நிறைவு நிகழ்வில் நடத்தப்பட்ட இரட்டை குண்டு வெடிப்பு தாக்குதலுக்கு இஸ்லாமிய அரசு அமைப்பு (ஐ.எஸ்) உரிமை கோரியுள்ளது.

நேற்று முன்தினம் காலை தெற்கு ஈரானில் உள்ள கெர்மானில் நடந்த தாக்குதலில் 103 பேர் கொல்லப்பட்டதோடு 171 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தத் தாக்குதலுக்குப் பின்னால் அமெரிக்காவும் இஸ்ரேலும் இருந்திருக்க வேண்டும் என்று ஈரான் முதலில் கூறியது.

டெலிகிராமில் அதன் சனல்கள் மூலம் ஐ.எஸ் உரிமை கோரியது. பின்னர் அதன் செய்தி நிறுவனம் முகமூடி அணிந்த இரண்டு நபர்களைக் காட்டும் ஒரு படத்தை வெளியிட்டு அவர்கள் தாக்குதல்களுக்கு காரணம் என்று தெரிவித்துள்ளது.

முதல் தற்கொலை குண்டுதாரி தனது வெடிகுண்டு பெல்ட்டை மக்கள் மத்தியில் வெடிக்கச் செய்ததாகவும் இரண்டாவது குண்டு தாரி சுமார் 20 நிமிடங் களுக்குப்



பிறகு தனது வெடிகுண்டுகளைத் வெடிக்கச் செய்ததாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

சமீப ஆண்டுகளில் ஈரானில் பொதுமக்கள் மற்றும் பாதுகாப்புப் படையினர் மீது ஐ.எஸ் தாக்குதல்களை நடத்திவருவது குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# சுவீடனில் பனிப்...
# சிக்கியுள்ள 1000 ...

(ஸ்டாக்ஹோம்)

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான சுவீடனில் 24 மணித்தியாலத்திற்கு மேலாக பொழிந்த கடும் பனியினால் ஸ்கேன் பகுதியில் உள்ள பிரதான வீதியில் 1000 வாகனங்கள் சிக்கியுள்ளன.

சுவீடனில் கடந்த செவ்வாய்க்கிழமை கடும் குளிரினால் வெப்பநிலை -40 டிகிரி செல்சியஸிற்கும் கீழ் குறைந்துள்ளது.

ஹார்பி மற்றும் கிறிஸ்டியான்ஸ்டாட் இடையே இரு திசைகளிலும் பனி சூழ்ந்ததால் கடந்த புதன்கிழமை E22 பிரதான வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டது.

இந்நிலையில், பிரதான வீதியில் காரில் சிக்கி இருந்தவர்கள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...வுகணைகளை
# ...வடகொரியா
## ...வெள்ளை மாளிகை

...டன்)

**...க்கு எதிரான ரஷ்யாவின் போரில் பயன்படுத்... வடகொரியா சமீபத்தில் ரஷ்யாவிற்கு பாலிஸ்டிக் ...கள் மற்றும் லாஞ்சர்களை வழங்கியதாக ...மாளிகை குற்றம்சாட்டியுள்ளது.**



ரஷ்யா வாங்க விரும்புவதாக வோஷிங்டன் நம்புகிறது.

உக்ரைனுக்கு எதிரான டிரோன்கள் மற்றும் பிற ஆயுதங்களுக்காக மொஸ்கோ ஈரானை பெரிதும் நம்பியுள்ளது எனத் தெரிவித்தார்.

இந்நிலையில், ரஷ்யா தன்னிடம் உள்ள பலம் வாய்ந்த கின்சால் ஏவுகணைகளை, உக்ரைன் நகரங்கள் மீது குறிவைத்து தாக்குதல் நடத்தியது.

ஒலியை விட 10 மடங்கு வேகத்துடன் பயணிக்கும் இந்த ஏவுகணைகள், உக்ரைனின் வான்பாதுகாப்பு தளபுாடங்களை மீறி கீவ், கார்கீவ் நகரங்களின் மீது பயங்கரமாக வெடித்து சிதறின.

இந்த தாக்குதலில் வானுயர கட்டடங்கள் சீட்டுக்கட்டு போல் சரிந்து விழுந்து நொறுங்கின.

கட்டட இடிபாடுகளில் சிக்கி உயிரிழப்புகள் ஏற்பட்டதாக உக்ரைன் நாட்டு ஊடகங்களில் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-5-6)

## அமெரிக்காவின் எச்சரிக்கையை மீறிய ஹவுதி அமைப்பினர்



(சனா)

செங்கடலில் பதற்றத்தை ஏற்படுத்திவரும் ஹவுதி கிளர்ச்சியாளர்களை அமெரிக்கா கடுமையாக எச்சரித்த நிலையில் அவர்கள் மீண்டும் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

செங்கடலில் கப்பல்கள் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நடத்தும் தாக்குதல்களை நிறுத்தாவிட்டால் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என அமெரிக்கா தலைமையிலான 12 நாடுகள் கூட்டாக எச்சரித்திருந்தன, இது இறுதி எச்சரிக்கை எனவும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

ஆனால் இந்த எச்சரிக்கையையும் மீறி ஹவுதி கிளர்ச்சியாளர்கள் செங்கடல் பகுதியில் தாக்குதலை நடத்துகின்றனர். நேற்று முன்தினம் செங்கடலில் ஆளில்லா படகை வெடிக்கச் செய்துள்ளனர்.

செங்கடலில் சுமார் 50 கி.மீ தூரம் டிரோன் படகை அனுப்பி ஆழ்கடலில் சரக்கு கப்பல்கள் வரும் பாதைகளில் வெடிக்கச் செய்ததாக அமெரிக்கக் கடற்படை தலைமை அதிகாரி பிராட் கூப்பர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், "வணிகக் கப்பல்கள் மற்றும் அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் செல்லும் கடற்பகுதியில் இருந்து 2 மைல் தொலைவுக்குள் இந்த சம்பவம் நடந்துள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே இடம்பெறுகின்ற போரில் ஏமன் நாட்டை சேர்ந்த ஹவுதி கிளர்ச்சியாளர்கள் பாலஸ்தீனத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

அதற்கு வலுச்சேர்க்கும் விதமாக, காசா மீது இஸ்ரேல் நடத்தி வரும் இராணுவத் தாக்குதல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, செங்கடலில் பயணிக்கும் இஸ்ரேல் ஆதரவு நாடுகளின் சரக்குக் கப்பல்கள் மீது தாக்குதல்களை நடத்துகிறார்கள்.

சரக்குக் கப்பல்களை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் வீசும் ஏவுகணைகளை அமெரிக்க இராணுவம் கடலிலேயே தகர்த்து அழித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## ...னிப்பொழிவில் ...000 வாகனங்கள்

அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


மேலும், சுமார் 180 வாகனங்களை விடுவிக்க இன்னும் முயற்சி செய்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை ஐரோப்பாவில் கடும் பனிப்பொழிவால் நோர்டிக் நாடுகளில் வெப்பநிலை குறைந்துள்ளது.

இதன் காரணமாக சுவீடன், பின்லாந்து மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் கடுமையான குளிர் வானிலையால் பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும், கடந்த புதன்கிழமை முதல் டென்மார்க்கில் பனிப்புயலால் ஆர்ஹஸ் அருகே உள்ள அதிவேக வீதியில் வாகனங்கள் சிக்கியுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி-5-6)

## செயற்கை சூரியனை உருவாக்கும் முயற்சியில் களமிறங்கிய சீனா



(பீஜிங்)

செயற்கை சூரியனை உருவாக்கும் முயற்சியில் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவை அடுத்து தற்போது சீனாவும் களமிறங்கியுள்ளது.

அந்தவகையில் செயற்கைச் சூரியனை உருவாக்கும் திட்டத்தினை எதிர்வரும் 2035ஆம் ஆண்டுக்குள் தயார்ப்படுத்தி முடிப்பதற்கு சீன அரசு முயற்சி செய்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த செயற்கை சூரியன் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

உண்மையான சூரியனைக் காட்டிலும் 7 மடங்கு அதிக வெப்பமாக இந்த சூரியன் உருவாக்கப்படவுள்ளது.

சீன அரசானது இந்த செயற்கை சூரியனை அணுக்கரு இணைவுத் தொழில்நுட்பத்தின் அடிப்படையில், உருவாக்க உள்ளது.

இந்த செயற்கை சூரியனின் மூலமாக உலகம் முழுவதும் நிலவும் எரிசக்தி சவால்களுக்கு ஒரு சிறந்த தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் சீனா தெரிவித்துள்ளது.

அந்த வகையில் சீனாவின் அரசு நிறுவனமான சீனா தேசிய அணுசக்தி கூட்டுத்தாபனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த செயற்கை சூரியனை உருவாக்கும் திட்டமானது 2035 ஆம் ஆண்டுக்குள் செயற்கை சூரியனின் முன்மாதிரியை உருவாக்கி, 2050 ஆம் ஆண்டுக்குள் அதனை பாரிய அளவிலான வர்த்தக உற்பத்தியாக ஆரம்பிக்கவும் சீனா திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐரோப்பாவும் அமெரிக்காவும் இந்த விடயத்தில் மிக வேகமாக செயற்பட்டு வரும் நிலையில், சீன அரசும் இப்போது இந்தப் பகுதியில் அதிக கவனம் செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பலன்கள் - 2024

## வேற்று இனத்தவர்களின் ஆதரவு கிட்டும்!



நல்லதோ, அல்லதோ முடிவெடுத்து விட்டால் முன்வைத்த காலைப் பின் வைக்காமல் முடித்துக் காட்டுவதில் வல்லவர்கள். எங்கும் எதிலும் முதலிடம் பிடிக்க எண்ணும் நீங்கள், யாருக்காகவும் எதற்காகவும் உங்களின் கொள்கையை விட்டுக்கொடுக்க மாட்டீர்கள். உங்கள் இராசிக்கு புதனும் சுக்கிரனும் சாதகமான வீட்டில் நின்று கொண்டிருக்கும் நேரத்தில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் நண்பர்களின் உதவி கிடைக்கும். காற்றோட்டம், தண்ணீர் வசதி அதிகமுள்ள வீட்டுக்கு மாறுவீர்கள். நிலுவையில் இருந்த வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். வேற்று இனத்தவர்களின் ஆதரவு கிட்டும். குலதெய்வ கோயிலை புதுப்பிப்பீர்கள்.

உங்கள் இராசியிலேயே இந்தாண்டு பிறப்பதால் பல சவால்களை எதிர் கொள்ள வேண்டி வரும். அடுக்கடுக்காக செலவுகள் இருக்கும் என்றாலும் அதற்கேற்ற வருமானமும் உண்டு. அடிக்கடி உடல் நிலை பாதிக்கும். உங்கள் இராசியை குருபகவான் பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் தொட்ட காரியங்கள் துலங்கும். குடும்பம் இன்பமயமாகும். புகழ், கௌரவம் கூடும். வேலை கிடைக்கும். சொந்த - பந்தம் மதிக்கும்படி பெரிய பதவிகளும் தேடி வரும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். வெளிநாட்டுப் பயணம் நீங்கள் எதிர்பார்த்தபடி அமையும். அக்கம் - பக்கம் வீட்டாருடன் இருந்த மோதல் நீங்கும். மனைவிபிள்ளைகளுடன் பேசி மகிழவும் நேரம் ஒதுக்குவீர்கள்.

30.04.2024 வரை உங்கள் இராசிக்கு 9 ஆம் வீட்டில் குரு நிற்பதால் எதிர்பார்த்த வகையில் பணம் வரும். தந்தையாரின் உடல் நிலை சீராகும். வங்கியில் வாங்கியிருந்த கடனை அடைப்பீர்கள். ஆளுங்கட்சியில் இருப்பவர்கள் உதவுவார்கள். கோயில் கும்பாபிஷேக திருப்பணி கமிட்டியில் இடம்பிடிப்பீர்கள். தங்க ஆபரணங்கள் வாங்குவீர்கள். கல்யாணம், காதுகுத்து, மஞ்சள் நீராட்டு, கிரஹப்பிரவேசம் என பல விசேஷங்களிலும் உங்களுக்கு முதல் மரியாதை கிடைக்கும். 1.5.2024 முதல் வருடம் முடியும் வரை உங்கள் இராசிக்கு 10ஆம் வீட்டில் குருபகவான் தொடர்வதால் எதிலும் அலட்சியமாக இல்லாமல் முன் யோசனையுடன் செயற்படப் பாருங்கள்.

அடுத்தவர்களை தாக்கிப் பேச வேண்டாம். முக்கிய வேலைகளை பிறரை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே நேரடியாகச் சென்று முடிப்பது நல்லது. குடும்ப அந்தரங்க விடயங்களை யாரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டாம். பிள்ளைகளின் நட்பு வட்டங்களை கண்காணியுங்கள். ஆண்டு முழுவதும் ராகு பகவான் உங்கள் இராசிக்கு 8 ஆவது வீட்டில் வந்தமர்கிறார். கேது பகவான் 2 ஆவது வீட்டில் வந்தமர்கிறார். தந்தையார் ஸ்தானத்தை விட்டு ராகு விலகுவதால் அவருடன் இருந்த மனக்கசப்புகள் விலகும். கேதுவால் வாக்குவாதங்கள் இருக்கும். யாருக்கும் உறுதிமொழி வழங்க வேண்டாம்.




கூடுதலாக சில மொழிகளை கற்றுக் கொள்வீர்கள். பொது அறிவுத் திறன் வளரும். இளைய சகோதரர் உங்களை மதிப்பார். இந்த ஆண்டு முழுவதும் 7ஆம் வீட்டில் சனிபகவான் தொடர்வதால் கணவன் - மனைவிக்குள் குழப்பத்தை ஏற்படுத்த சிலர் முயற்சி செய்வார்கள். எச்சரிக்கையாக இருக்கவும். உடம்பில் இரும்புச் சத்து, சுண்ணாம்புச் சத்து குறையும்.

வியாபாரிகளே! தேங்கிக்கிடந்த சரக்குகளை சாமர்த்தியமாக விற்றுத் தீர்ப்பீர்கள். பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். வாடிக்கையாளர்களை கவர சலுகைத் திட்டங்களை அறிவிப்பீர்கள். புது ஏஜென்சி எடுப்பீர்கள். மே மாதத்தில் வியாபாரத்தை விரிவுபடுத்த புதிய தொடர்புகள் கிடைக்கும். அதிரடி லாபங்களும் உண்டாகும். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்களிடையே இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் மறையும்.

உத்தியோகத்தர்களே! பதவி உயர்வு கிடைக்கும். எல்லோரும் மதிப்பார்கள். மேலதிகாரியின் ஒத்துழைப்பு இனி கிடைக்கும். காலம் தாழ்த்தாமல் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். முக்கிய பதிவேடுகளை கவனமாக கையாளுங்கள். இந்தப் புத்தாண்டு கட்டுக்கடங்காத செலவுகளை தந்து, கடினமாக உழைக்க வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளினாலும் மற்றொரு பக்கம் மகிழ்ச்சியையும் வெற்றியையும் தருவதாக அமையும்.

பரிகாரம்: பத்ரகாளியை சென்று வணங்குங்கள். நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுங்கள்.

## சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்!



கன்னி: பிரச்சினைகளைக் கண்டு அலட்டிக் கொள்ளாத நீங்கள், எதுவாக இருந்தாலும் சந்திக்க ஒருபோதும் தயங்கமாட்டீர்கள். எளிமையான வாழ்க்கையும் எதார்த்தமான பேச்சும் கொண்ட நீங்கள், மனசாட்சிக்கு மதிப்பளித்து நடப்பவர்கள். சுக்கிரனும் புதனும் சாதகமான நட்சத்திரத்தில் சென்று கொண்டிருக்கும் நேரத்தில் இந்தாண்டு பிறப்பதால் பிரச்சினைகளை சமாளிக்கும் தைரியம் பிறக்கும். கோபம் குறையும். செலவுகள் அடுத்தடுத்து வரும். கணவர் ஆதரவாகப் பேசுவார். குடும்பத்தில் சந்தோஷம் வரும். உங்கள் இராசிக்கு 12 ஆம் வீட்டில் இந்தாண்டு பிறப்பதால் செலவுகள் உங்களை துரத்தும். பயணங்களும் அலைச்சல்களும் அடுத்தடுத்து இருக்கும்.

30.4.2024 வரை குருபகவான் உங்கள் இராசிக்கு 8 ஆவது வீட்டில் மறைந்திருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியாதபடி செலவுகள் துரத்தும். இருந்தாலும் எதிர்பாராத பணவரவு உண்டு. பழைய நண்பர்கள் தேடி வருவார்கள். சொந்த-பந்தங்களுக்காக அலைய வேண்டி வரும். கும்பாபிஷேகத்தை முன்னின்று நடத்துவீர்கள். 1.5.2024 முதல் வருடம் முடிய உங்கள் இராசிக்கு 9 ஆம் வீட்டில் குருபகவான் அமர்வதால் எதிலும் வெற்றி பெறுவீர்கள். வி.ஐ.பிகள் அறிமுகமாவார்கள். கௌரவப் பதவிகள் தேடி வரும். திருமணம், சீமந்தம் போன்ற சுப நிகழ்ச்சிகள் வீட்டில் நடக்கும். மனைவியுடன் இருந்த மோதல்கள் நீங்கும். குழந்தை பாக்கியம் உண்டாகும். வருங்காலத்தை மனதில் கொண்டு சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உங்களிடம் கடன் வாங்கி நீண்ட நாட்களாக ஏமாற்றியவர்கள் பணத்தைத் திருப்பித் தருவார்கள்.

தங்க ஆபரணங்கள் வாங்குவீர்கள். பாதியில் முடங்கிக் கிடந்த வீடு கட்டும் பணி முழுமையடையும். அரசு சம்பந்தப்பட்ட வேலைகள் விரைந்து முடியும். நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். ஏளனமாகவும் இழிவாகவும் திட்டியவர்கள் எல்லாம் இனி உங்களை பாராட்டுவார்கள். புதிதாக நிலம், வீடு வாங்குவீர்கள். பூர்வீகச் சொத்தை சீரமைப்பீர்கள். தாய்வழியில் இருந்த மனக்கசப்புகள் நீங்கும். எதிர்பார்த்துக் காத்திருந்த அயல்நாடு பயணம் சாதகமாக அமையும். இந்த வருடம் முடிய உங்கள் இராசிக்குள் கேதுவும் 7 ஆம் வீட்டில் ராகுவும் அமர்கிறார்கள். கேது இராசிக்குள் வருவதால் தலைச் சுற்றல், குமட்டல், நாக்கில் கசப்பு வந்து நீங்கும்.

சில நேரங்களில் முன்கோப த்தால் எடுத்தெறிந்து பேசுவீர்கள். நேரம் கிடைக்கும் போது யோகா, தியானம் செய்யத் தவறாதீர்கள். எளிய உடற்பயிற்சிகளை மேற்கொள்வது நல்லது. 7 ஆம் வீட்டில் ராகு அமர்வதால் கணவன் - மனைவிக்குள் சந்தேகத்தால் அடிக்கடி சண்டை வரும். மனைவி வழி உறவினர்களை பகைத்துக் கொள்ள வேண்டாம்.




இந்த ஆண்டு முழுவதும் சனி பகவான் உங்கள் இராசிக்கு 6 ஆவது வீட்டிலேயே வலுவாக இருப்பதால் எத்தனை பிரச்சினைகள் வந்தாலும் அவற்றையெல்லாம் சமாளிக்கக் கூடிய மனோபலம் உங்களுக்குக் கிடைக்கும். வி.ஐ.பிகளும் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு. வழக்குகளில் வெற்றி கிடைக்கும்.

வியாபாரிகளே! முடங்கிக் கிடந்த நீங்கள் புத்துயிர் பெறுவீர்கள். பழைய கடையைப் புதுப்பித்து விரிவுபடுத்துவீர்கள். பெப்ரவரி, மார்ச் மாதங்களில் பழைய பாக்கிகள் வசூலாகும். பழைய சரக்குகள் விற்றுத் தீரும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள். வாடிக்கையாளர்களை அதிகப்படுத்த சில விளம்பர யுத்திகளை கையாளுவீர்கள். கூட்டுத் தொழிலில் விலகிச் சென்ற பங்குதாரர்கள் மீண்டும் வருவார்கள்.

உத்தியோகத்தர்களே! உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உங்களுக்கு இன்னல்கள் கொடுத்த அதிகாரி மாற்றப்படுவார். புதிய அதிகாரி உங்களுக்கு ஆதரவாக இருப்பார்.

இழுபறியாக இருந்த பதவியுயர்வு இப்போது கிடைக்கும். சம்பளம் கூடும். பெப்ரவரி, மார்ச், ஓகஸ்ட் மாதங்களில் பெரிய வாய்ப்புகள் தேடி வரும். இந்தப் புத்தாண்டு உங்களின் நீண்டநாள் ஆசைகளை நிறை வேற்றுவதாகவும் அடிப்படை வசதி வாய்ப்புகளை பெருக்கி சமூகத்தில் அந்தஸ்தை தருவதாகவும் அமையும்.

பரிகாரம்: ஏழை கன்னிப்பெண்ணின் திருமணத்துக்கு உதவுங்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லிற்கு நியாய விலையை பெற்றுத் தருமாறு கோரிக்கை

(அக்கராயன்)

**நெல்லுக்கான உத்தரவாத விலை விரைவாக பெற்றுத் தர வேண்டும் என கிளிநொச்சி மாவட்டச் செயலாளரிடம் மாவட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

தைப் பொங்கல் கழித்து கால போக நெற்செய்கை அறுவடை தொடங்க உள்ள நிலையில் நெல் லுக்கான நியாய விலை கிடை க்க வேண்டும். தற்போது உற்பத்திகான செலவு, அதே போன்று அறுவடைக்கான எரிபொருள் விலை மற்றும் அறுவடைக் கூலி மருந்துகளின் வில்லகளும் அதிகரித்து உள்ளன.

இந்நிலையில் மாவட்டச் செயலகம் அறுவடைகள் தொடங்கும் முன்னரே நெல்லிற்கான நியாய விலையினை பெற்றுத் தருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களிலும் நியாய விலைகள் நெல்லிற்கு 'கிடைக்காததன் காரணமாக இழப்புகளையே விவசாயிகள் எதிர்கொண்டனர்.

உற்பத்திக்கான செலவு கூடு தலாகவும் நெல் விற்பனையின் போது குறைந்த விலையிலும் விற்பனை செய்கின்ற நிலைமைகள் இவ்வாண்டு மாற வேண்டும் எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மாவட்டத்தில் இரணை மடுக்குளம், கல்மடுக்குளம், புது முறிப்புக்குளம், அக்கராயன்குளம், குடமுருட்டிக் குளம், கரியாலைநாகபடுவான் குளம் உட்பட சிறிய, பெரிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் 70,000 ஏக்கர் வரையில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-350)

# மன்னார் விடத்தல்தீவு கிராமத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை



(மன்னார்)


மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விடத்தல் தீவு கிராமத்தில் கடந்த சில தினங்களாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் குறித்த கிராமத்தில் டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டன.

சுகாதார திணைக்களம், மாந்தை மேற்கு பிரதேச செயலகம், பிரதேச சபை, பொலிஸார் மற்றும் உள்ளூர் அமைப்புகள் இணைந்து ஒருங்கிணைந்த டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது குறித்த பிரதேசத்தில் கைவிடப்பட்ட காணிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

மேலும் குறித்த வீடுகளில் அடையாளம் காணப்பட்ட பொருட்கள் சேகரிக்கப்பட்டு, பிரதேச சபையின் உதவியுடன் ஜே.சி.பி வாகனத்தால் அகழ்ந்தெடுக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டன. (நி-5-6-285)

# தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடிக்கு தங்கம் கடத்தல்



(மன்னார்)

தலைமன்னாரில் இருந்து சட்டவிரோதமாக கடல் வழியாக படகில் தனுஷ்கோடிக்கு கடத்தி செல்லப்பட்ட இந்திய மதிப்பு 4.50 கோடி ரூபாய் மதிப்பிலான 7.70 கிலோ கடத்தல் தங்கம் திருச்சி மத்திய நுண்ணறிவு பிரிவு சுங்கத்துறை அதிகாரிகளால் தங்கச்சிமடம் அடுத்த தர்கா பேருந்து நிலையம் அருகே வைத்து நேற்று முன்தினம் இரவு பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

அதிகாரிகளை தாக்கி விட்டு தப்பிச் சென்ற நபரை சுங்கத் துறை அதிகாரிகள் தீவிரமாக தேடி வருகின்றனர்.

திருச்சி மத்திய நுண்ணறிவு பிரிவு சுங்கத்துறை அதிகாரிகளுக்கு கிடைத்த ரகசிய தகவலை அடுத்து குறித்த பறிமுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (நி-5-6-285)

# ஜனாதிபதியின் வருகையை எதிர்த்து பொன்னாவெளியில் போராட்டம்

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பொன்னாவெளி பகுதியில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விஜயம் செய்துள்ள நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் சீமெந்து உற்பத்திக்கான சுண்ணக்கல் அகழ்வுக்கு அனுமதி வழங்கியதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலகம் முன்பாக ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டத்திற்கு எதிராக பூநகரி பொலிஸார் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து குறித்த போராட்டமானது நேற்று பூநகரி பொன்னாவெளி பகுதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.




இதன்போது தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் மற்றும் தமிழ் தேசிய முன்னணியினர், மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் இணைந்து குறித்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-315-350)

# வவுனியாவில் பலப்படுத்தப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள்

(குருமன்காடு)

வடக்கிற்கு 4 நாள் பயணம் மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று வவுனியாவிற்கு சென்றிருந்த நிலையில் அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

மேலும் மாநகரசபை கலாசார மண்டபத்தினை அண்மித்துள்ள நூலக வீதி , நகரசபை வீதி என்பன முடக்கப்பட்டிருந்தன. (நி-5-6-250)



# வவு.விமானப்படைத் தளத்தை புகைப்படம் எடுத்த இளைஞன் கைது

(குருமன்காடு)

வவுனியா விமானப்படை தளத்தை புகைப்படம் எடுத்ததாக சந்தேகத்தின் பேரில் இளைஞரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று வவுனியா விமானப்படை தளத்தில் ஜனாதிபதி விசேட விமானத்தில் வருகை தந்து வன்னி அபிவிருத்தி குழு கூட்டத்தில் கலந்துகொள்ள உள்ள நிலையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் பாதுகாப்பு வாகனத்தொடரணி சென்றுகொண்டிருந்த நிலையில் அதனை இளைஞரொருவர் புகைப்படம் எடுத்தமையை அவதானித்த படைப் பாதுகாப்பு உத்தியோகத்தரொருவர் குறித்த இளைஞனை கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

குறித்த இளைஞன் பூனாவ பகுதியை சேர்ந்த பைருஸ் பவா ஹிர் என்பவராவார். இவரிடம் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி-5-6-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 371





பிரயாணிகளைத் தாண்டிச் சென்ற குதிரைகள் சற்றுத் தூரம் போனதும் கம்பீரமான ஒரு குரலில் "நில்லுங்கள்!" என்று கட்டளை பிறந்தது. குதிரைகள் நின்றன் பிறகு, இந்தப் பக்கமாகத் திரும்பின. அவர்களில் தலைவனாகக் காணப்பட்டவன் குதிரையைச் செலுத்திக்கொண்டு முன்னால் வந்தான். மற்றவர்கள் பின் தொடர்ந்து வந்தார்கள். முன்னால் வந்தவன், வல்லவரையன் எண்ணியது போலவே, நாம் முன்னம் மாமல்லபுரத்தில் பார்த்திருக்கும் பார்த்திரபேந்திர பல்லவன்தான்.

வந்தியத்தேவனை அவன் உற்றுப் பார்த்துவிட்டு, "இது என்ன அப்பா இது? நீ எப்படி இங்கே வந்து சேர்ந்தாய்? தஞ்சாவூரில் நீ திடீரென்று மாயமாய் மறைந்துவிட்டாய் என்று சொன்னார்களே? உன்னைப் பழுவேட்டரையர்கள் தீர்த்திருப்பார்கள் என்றல்லவா நினைத்தேன்!" என்றான்.

"பழுவேட்டரையர்களால் என்னை அவ்வளவு எளிதில் தீர்த்துக்கட்ட முடியுமா? நான் பழைய வாணர் குலத்தைச் சேர்ந்தவன் அல்லவா?"

"ஆம், ஆம்! எப்படியாவது உயிரைக் காப்பாற்றிக் கொண்டு தப்பிப் பிழைப்பதில் உனக்கு இணை வேறு யாரும் இல்லை"

"ஐயா! உயிரைக் காப்பாற்றிக் கொள்வது அவசியமாயிருக்கும்போது காப்பாற்றிக் கொள்வேன். உயிரைக் கொடுக்க வேண்டிய சமயத்தில் கொடுக்கவும் அறிவேன். அப்படி நான் சாவதாயிருந்தால் தங்களைப் போன்ற பழைய பல்லவ குலத் தோன்றலுடன் சண்டை போட்டுச் சாவேனே தவிர, கேவலம் பழுவேட்டரையர்களின் கையினால் சாவேனா?" என்று சொல்லிக் கொண்டே வந்தியத்தேவன் உறையிலிருந்து வாளை உருவினான்.

"சேச்சே! உன்னோடு என்னைச் சண்டைபோடச் சொல்கிறாயா? அதுவும் இந்தத் தூரதேசத்திலே வந்து! வேண்டாம், தம்பி, வேண்டாம்! எனக்கு அவசர வேலை இருக்கிறது! உன்னிடம் இளவரசர் ஒப்புவித்த காரியம் என்ன ஆயிற்று?"

"செய்து முடித்துவிட்டேன், ஐயா! சக்கரவர்த்தியிடம் கொடுக்கும்படி பணித்த ஓலையைச் சக்கரவர்த்தியிடம் கொடுத்தேன். இளைய பிராட்டியிடம் கொடுக்கச் சொன்ன ஓலையை அவரிடம் கொடுத்தேன்!"

"இங்கே எதற்காக வந்தாய்?"

"இலங்கையைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை எனக்கு வெகு நாளாக இருந்தது. அதற்காக இந்த வைஷ்ணவரோடு புறப்பட்டு வந்தேன்."

"ஆகா! இந்த ஆளைக்கூட நான் எங்கேயோ பார்த்திருக்கிறேன் போலிருக்கிறதே!"

"ஆம் மகாராஜா பார்த்திருக்கிறீர்கள். என் சகோதரியைப் பற்றி ஏதாவது தெரியுமா என்று விசாரிப்பதற்காக இளவரசர் ஆதித்தரிடம் வந்தேன். அப்போது தாங்களும் அவர் பக்கத்தில் இருந்தீர்கள்!"

"அது யார் உன் சகோதரி?"

"இப்போது பழுவூர் இளைய ராணியாக விளங்கும் நந்தினி தேவி!"

"ஆகா! அந்த விஷப் பாம்பினால் நாட்டுக்கு நேர்ந்திருக்கும் தீங்குகளையெல்லாம் நினைத்தால் அவளுடைய அண்ணனாயிருப்பதற்காக உன்னைக் கழுவில் ஏற்ற வேண்டும்!"

"மகாராஜா! ஒரு நாள் நான் கழுவில் ஏறிச் சாவதாகவே சபதம் செய்து கொண்டிருக்கிறேன். அன்றைக்குத் தாங்களே வந்து தங்கள் கையினாலேயே அந்தத் திருக்கைங்கரியத்தைச் செய்து விட்டால்."


"உன்னைக் கழுவில் தூக்கிப்போட என்னால் முடியுமா? அதற்கு நூறு ஆள் வேண்டும். இருக்கட்டும் நீங்கள் வருகிற வழியில் இளவரசரைப் பற்றி ஏதாவது செய்தி கேள்விப்பட்டீர்களா?

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## குளிரில் நின்றால் பரிசு



ஒரு நாள் இரவு நேரத்தில் அக்பரும், பீர்பாலும் உரையாடிக்கொண்டிருந்தார்கள். குளிர் அதிகமாக இருந்ததால் சால்வையை இறுக்கமாக இருவரும் போர்த்திக் கொண்டிருந்தனர். அப்படியும் குளிர் அக்பரை மிகவும் வாட்டியெடுத்தது.

அக்பர் பீர்பாலை பார்த்து "பீர்பால் இந்த குளிரின் கொடுமையை பார்த்தீரா எதிரிகளுக்கு அஞ்சாத நெஞ்சம் இருந்தும் இந்த குளிருக்கு அஞ்சாமல் இருக்க முடியவில்லையே! இந்த குளிரை பொருட்படுத்தாமல், யமுனை ஆற்றில் ஒரு இரவு முழுக்க, கழுத்தளவு நீரில் யாராலும் நிற்க இயலுமோ! அவ்வாறு நின்றால், அவர்களுக்கு ஆயிரம் பொற்காசுகள் பரிசாக வழங்கலாம்" என்றார்.

"அரசே, சிங்கத்தின் முடியை கூட கொண்டு வந்துவிடலாம். ஆனால் நடுங்கும் குளிரில் இரவு முழுவது ஆற்றில் நிற்பது என்பது சாதாரண காரியமா?" என்றார் பீர்பால்.

"யமுனை ஆற்றில் குளிரில் நிற்பதற்கு எந்தவித திறமையும் தேவையில்லை, மன உறுதி இருந்தாலே போதும்! நாடு முழுவதும் இந்த செய்தியை அறிவிக்க சொல்லுங்கள்! பணத்தின் மீது ஆசைப்பட்டு நிறைய பேர் பங்கு பெற வருவார்கள். அதில் யார் வெற்றி பெறுவார்கள் எனப்பார்ப்போம்" என்றார் அக்பர்.

அரசரின் ஆணை நாடெங்கும் அறிவிக்கப்பட்டது. அடுத்த நாளே, ஒரு இளைஞன் அரசரிடம் வந்து" அரசே, யமுனை நதியில் கழுத்தளவு நீரில் இரவு முழுவதும் நிற்பதற்கு நான் தயாராக இருக்கிறேன்" என்றான்.

அக்பர் அந்த இளைஞனை வியப்பாக பார்த்து "இன்று இரவு போட்டிக்கு தயாராகு" என்றார். இளைஞனும் தயாரானான். நடுங்கும் குளிரில் நிற்பது சாதாரண விடயமில்லையே என நினைத்த அக்பர், அந்த இளைஞனை கண்காணிப்பதற்கு இரண்டு காவலாளிகளை நியமித்தார்.

யமுனை ஆற்றில் வெற்று உடம்புடன் இறங்கினான் இளைஞன். கழுத்தளவு வரை நீர் உள்ள இடத்தில் நின்று கொண்டான். உடல் மிகவும் நடுங்கியது, குளிர் வாட்டியது, அவனால் தாக்குபிடிக்க முடியவில்லை. ஆனாலும் பரிசாக கிடைக்கப் போகும் ஆயிரம் பொற்காசுகளை எண்ணி பார்த்தான். புது தெம்பு வரவே, இரவு முழுவதும் கண் விழித்து நின்று கொண்டிருந்தான்.

பொழுது விடிந்தது. வெயில் மேனியில் பட உடல் சீரான நிலைக்கு வந்தது. ஆயிரம் பொற்காசுகளை பெறப்போகிறோம் என்ற மகிழ்ச்சியில் ஆற்றை விட்டு மேலே வந்தான். அவனை காவலாளிகள் மன்னரிடம் அழைத்து சென்று இரவு முழுவது இளைஞன் கழுத்தளவு நீருக்குள் நின்றதை கூறினார்கள்.

அக்பருக்கோ மிகவும் வியப்பாக இருந்தது. "இளைஞனே உன் மன உறுதியை பாராட்டுகிறேன்! அந்த இரவில், கடும் குளிரில் நீருக்குள் எப்படி இருந்தாய்?

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறு ஒன்றுதான் அரசின் தயவை வேண்டும். உண்மைக்கு அது வேண்டியதில்லை.

~ தாமஸ் ஜெபர்ஸன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தான் கொடுத்த இரு வரத்தை தசரதர் நிராகரிக்காதது ஏன்?

ஒருமுறை போர்க்களத்தில் கைகேயி தனக்கு உதவி புரிந்ததன் காரணமாக அவளுக்கு இரண்டு வரங்களைத் தசரதர் கொடுத்தார்.

இரு வரங்களைப் பெற்ற கைகேயி, தேவை வருகின்றபோது அவற்றைப் பெற்றுக் கொள்கின்றேன் என்றாள்.

காலம் கடந்தது. இராமபிரானுக்குப் பட்டாபிஷேக ஏற்பாடுகள் நடக்கலாயின.

அந்தோ! கொடுமை. ஏலவே தசரதர் வழங்கிய இரு வரங்களைக் கைகேயி கேட்கலானாள்.

இராமன் 14 ஆண்டுகள் காடாள வேண்டும். பரதன் நாடாள வேண்டும். இந்த இரண்டு வரங்களையும் தசரதர் மறுத்திருக்க முடியும். தனது மறுப்புக்குப் பல காரணங்களை அவர் முன்வைத்திருக்கலாம்.

ஆனால் அதை அவர் செய்யவில்லை. இங்குதான் வாக்குறுதியை மீறுவது தர்மமன்று. அதிலும் தனக்குத் தீராத் துன்பத்தைத் தரக்கூடியதாக அவ்விரண்டு வரங்கள் கேட்கப்பட்டாலும் அந்தத் துன்பத்தைத் தாங்கிக் கொண்டு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதுதான் மன்னர்க்கு அழகு என்ற அரச நீதியை தசரதர் நிறைவேற்றி, வாக்குறுதிகள் காப்பாற்றப்பட வேண்டும் என்ற அறத்தை இவ்வுலகுக்கு எடுத்துரைத்தார்.

ஆனால் இலங்கையில் ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள் ஒருபோதும் தாங்கள் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவே இல்லை.

ஆம், ஆனந்தசுதாகரன் என்ற தமிழ் அரசியல் கைதியின் இரண்டு குழந்தைகள் பெற்ற தாயை இழந்த நிலையில் அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துத் தங்கள் தந்தையை விடுதலை செய்யுங்கள் எனக் கெஞ்சுகின்றனர்.

அந்தப் பிஞ்சுகளின் தலையைத் தடவியவாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறுகிறார்; அடுத்த பொங்கலுக்கு முன்பாக உங்கள் தந்தை உங்களோடு இருப்பார் என்ற வாக்குறுதியை அளிக்கிறார்.

இந்த நாட்டின் ஜனாதிபதி கூறியதை நம்பியவாறு குழந்தைகள் வீடு திரும்புகின்றனர்.

கடவுளே! எத்தனை பொங்கல்கள் கடந்துவிட்டன. கடைசி வரை மைத்திரிபால சிறிசேன, தாயைப் பறிகொடுத்த அந்த குழந்தைகளுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.

இதுபோலத்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும்.

நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னதாகத் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்.

75ஆவது சுதந்திர தினத்தை நாங்கள் அனைவரும் சகோதரர்களாக கொண்டாடுவோம் எனக் கூறினார்.

75ஆவது சுதந்திர தினம் நடந்தாயிற்று. ஆனால் இனப் பிரச்சினைக்கான தீர்வு அப்படியே கிடப்பில். இதுதான் எங்கள் ஆட்சித் தலைவர்களின் அழகு எனும்போது, 2025 இல் இடம்பெயர்ந்தவர்கள் என்று யாருமே இருக்கமாட்டார்கள் என்ற வாக்குறுதி மட்டும் நிறைவேறப் போகிறதா என்ன?

## அராலி மேற்கில் கிணற்றினுள் தவறி விழுந்த பெண் மரணம்

யாழில் கிணற்றில் தண்ணீர் அள்ளுவதற்கு முற்பட்ட 96 வயதான பெண் ஒருவர் கிணற்றினுள் தவறிவிழுந்து உயிரிழந்துள்ளார்.

அராலிமேற்கு வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம் தங்கம்மா என்வரே உயிரிழந்தவராவார்.

வீட்டில் உள்ள கிணற்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தண்ணீர் அள்ளுவதற்கு முற்பட்ட வேளை கிணற்றில் தவறி விழுந்தார் என மரண விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## புத்தளத்தில் விபத்து ஒருவர் உயிரிழப்பு

புத்தளம் பாலாவி கற்பிட்டி பிரதான வீதியின் கரம்பை பாலத்திற்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புத்தளம் பாலாவியிலிருந்து நுரைச்சோலைப் பகுதி நோக்கிச் சென்ற லொறியை முந்திச் செல்ல முற்பட்ட மோட்டார் சைக்கிளொன்று எதிர்திசையில் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த விபத்தானது நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் இராணுவ விஷேட படையணியின் சார் ஜண்ட் மேஜராக கடமையாற்றி ஓய்வு பெற்ற பாலாவி பொத்துவில் பகுதியைச் சேர்ந்த அனுர மங்கள குமார என்பவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், உயிரிழந்தவரின் சடலம் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## திருநெல்வேலியில் திருவாசக முற்றோதல்

(திருநெல்வேலி)

திருநெல்வேலி பழங்கிணற்றடி பிள்ளையார் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை திருவாசக முற்றோதல் இடம்பெறும்.

அன்று காலை 7.30 மணிக்கு திருவாசக முற்றோதல் ஆரம்பமாகும். (ம)

## யாழ். கல்லுண்டாயில் வாகன விபத்து இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்லுண்டாய் வெளிப் பகுதியில் கல்லுண்டாய் வைரவர் கோவிலுக்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று மாலை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது மோட்டார் சைக்கிளில் யாழ் நோக்கிப் பயணித்த இருவரும் யாழில் இருந்து வட்டுக்கோட்டை நோக்கி பயணித்த கப் ரக வாகனமும் நேருக்கு நேர் மோதிய நிலையே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தை, மகன் ஆகியோர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கப் ரக வாகனத்தின் சாரதி பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கப் வாகன சாரதியின் தூக்க கலக்கமே விபத்துக்கான காரணம் என ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-7)

## கசிப்பு உற்பத்தி நிலையம் புதுக்குடியிருப்பில் முற்றுகை

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று முற்றுகையிடப்பட்டுள்ளதுடன் விற்பனைக்கு தயாராக மறைத்து வைக்கப்பட்டிருந்த 45 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளது.

நேற்று மாலை குறித்த முற்றுகை சம்பவம் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட திம்பிலி கிராம அலுவலர் பகுதியில் அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த கிராம அமைப்புக்கள் இளைஞர்கள், பொலிஸார் ஒன்று திரண்டு குறித்த முற்றுகை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது விற்பனைக்கு தயாரான நிலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 45 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டிருந்தது. எனினும் சந்தேகநபர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை. (ம-7,299)

## ஐஸ் போதைப்பொருளுடன் புதுக்குடியிருப்பில் இருவர் கைது

புதுக்குடியிருப்பில் ஐஸ் போதைப் பொருளுடன் இளைஞர்கள் இருவர் நேற்று முன்தினம் பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து தேராவில் இராணுவ சிற்றுண்டிச்சாலைக்கு அருகாமையில் விசேட சோதனை நடவடிக்கையினை மேற்கொண்ட புதுக்குடியிருப்பு பொலிஸார் 2 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞர்கள் இருவரை கைது செய்தனர்.

புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரம், உடையார்கட்டு பகுதிகளை சேர்ந்த 22, 27 வயதுடைய இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். (ம-7,299)

## கொழும்பு - பதுளை ரயில் சேவை முடக்கம்

கொழும்பு - பதுளைக்கான தொடருந்து ஒன்று தடம் புரண்டதில் மலையகத்திற்கான தொடருந்து சேவைகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கி புறப்பட்டு வந்த தொடருந்து தலவாக்கலைக்கும் கிரேஸ்வெஸ்ட்டன் பகுதிக்கும் இடையில் தடம் புரண்டதால் மலையகத்திற்கான தொடருந்து சேவைகள் தடைப்பட்டுள்ளன.

குறித்த தொடருந்து தடம் புரண்டதின் காரணமாக கொழும்பு நோக்கி செல்லும் பயணிகள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

கொழும்பில் இருந்து வரும் ரயில்கள் தலவாக்கலை வரையும் பதுளையில் இருந்து வரும் ரயில்கள் நானுஓயா வரை யும் மட்டுப்படுத்தப்பட்டு உள்ளதாக தலவாக்கலை தொடருந்து நிலையம் தெரிவித்துள்ளது. (ம-7)

## மணிவிழா

(உரும்பிராய்)

உரும்பிராய் சந்திரோதய வித்தியாலய அதிபர் திருமதி வாசுகி மன்மதராஜன் அவர்களின் மணிவிழா இன்று சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் உரும்பிராய் இராஜேஸ்வரி மண்டபத்தில் இடம்பெறும். (ம)

## பேராதனை பல்கலையில் ஒருவருக்கு கொரோனா

(கொழும்பு)

கொரோனா தொற்று மீண்டும் பரவலடையும் அபாயம் ஏற்பட்டுள்ள நிலையில், பேராதனை பல்கலைக்கழக ஊழியர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து, பல்கலைக்கழக ஊழியர்கள் முகக்கவசம் அணிய வேண்டும் என பல்கலைக்கழக சுகாதார நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது.

பேராதனை பல்கலைக்கழகத்தில் காய்ச்சல், தடிமன் காணப்பட்ட செனட் காரியாலய ஊழியருக்கே இவ்வாறு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதையடுத்து தனிமைப்படுத்தப்பட்ட அவர் உடனடியாக பேராதனை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் நடைமுறைப்படுத்த இருக்கும் மக்கள் சபைகள் (ஜனசபா)



04

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

**1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க மாவட்ட அபிவிருத்திச் சபைகள் சட்டம்**

கிராம சபைகள் மற்றும் பட்டின சபைகள் சட்டத்தின் கீழ் இருந்த அதிகாரங்கள் சகிதம் இவ்விரண்டு நிறுவனங்களினதும் பொறுப்புக்களைச் செயற்படுத்தும் வகையிலும் அமைந்த மாவட்ட அபிவிருத்திச் சபை எனப்படும் புதியதொரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இச் சட்டத்தின் மூலம் அப்போதிருந்த பட்டின சபைகள் மற்றும் கிராம சபைகள் இல்லாது ஒழிக்கப்பட்டன. இந்த மாவட்ட அபிவிருத்திச் சபையில் பாராளுமன்ற உறுப்பினர்களும் உள்வாங்கப்பட்டனர். மேலும் குறைந்தளவு எண்ணிக்கையான மக்கள் உறுப்பினர்களே தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டு மாவட்ட அபிவிருத்திச் சபைக்கு நியமிக்கப்பட்டார்கள்.

இவ்வபிவிருத்தி சபைகளை நிறுவுவதற்கு இரண்டு பிரதான நோக்கங்கள் காணப்பட்டன. அந்தந்த மாவட்டங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மத்திய அரசின் மாவட்ட மட்ட நடவடிக்கைகளையும் இணைப்புச் செய்கின்ற நிறைவேற்று அதிகாரமுள்ள மாவட்ட அமைச்சரின் ஊடாக நிருவாகத்தைப் பன்முகப்படுத்துதல் அதன் முதல் நோக்கமாகும்.

மாவட்ட மட்ட திட்ட முறைமைகளை அமுலாக்கம் செய்கையில் அபிவிருத்தி சபைகள் ஊடாக பிரதேச வாசிகளான மக்களின் பங்களிப்பை அதற்காகப் பெற்றுக்கொள்வது அதன் இரண்டாவது நோக்கமாகும்.

மாவட்ட அபிவிருத்தி திட்டங்களைத் தயாரித்தல், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்களை வழங்குதல், அந்நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் அரசாங்க செயற்றிட்டங்களை அமுலாக்கம் செய்கின்றபோது எதிர்கொள்ளவேண்டி வருகின்ற இடையூறுகளுக்கான மாற்றுத் தீர்வுகளை முன்வைத்தல் மற்றும் பிரதேசத்திற்குள்ள திணைக்களங்களுக்கிடையிலான நடவடிக்கைகளை இணைப்புச் செய்தல் என்பன இவ்வபிவிருத்தி சபை முறைமை ஊடாக எதிர்பார்க்கப்பட்ட மற்றொரு பணியாகும்.

1981.07.01 ஆம் திகதி 24 மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கு உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய அதிகாரங்களுடன், அன்றைய காலகட்ட 11 அமைச்சுக்களுக்குரிய 15 அபிவிருத்தித் திட்டங்களும் கையளிக்கப்பட்டன. குறித்த மாவட்டங்களின் இருந்த உள்ளூராட்சி மன்றங்கள் "அபிவிருத்திச் சபை உப அலுவலகம்" எனப் பெயரிடப்பட்டன. 549 கிராம சபைகளும், 83 பட்டிண சபைகளும் இதன் மூலம் இல்லாதொழிக்கப்பட்டன.

இவற்றில் 7781 உறுப்பினர்கள் அடங்கியிருந்ததுடன், இவற்றுள் 156 பேர் மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் ஆவர். ஆனால் இம் முறை, மக்களுக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இடையே பெரிய இடைவெளியைத் தோற்றுவித்தது. இதை நிவர்த்தி செய்யும் முகமாக அப்போதிருந்த 4712 கிராம சேவகர் பிரிவுகளிலும் தலா ஒரு "கிராமோதய சபை" தாபிக்கப்பட்டது.

**மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் நிர்வாகத்திலிருந்த நடைமுறைச் சிக்கல்கள்**

இந்த சபையில் அங்கம் வகிக்கும் மாவட்ட அமைச்சரையும், செயலாளரையும் ஜனாதிபதியே நியமிப்பார். ஆக அவர்கள் ஜனாதிபதியின் நம்பிக்கைக்குக்குரியவர்களே. நடைமுறையிலும் அது தான் நிகழ்ந்தது.

இம் மாவட்ட அமைச்சர் தமது செயற்பாடுகள் தொடர்பாக பாராளுமன்றத்திற்கு பொறுப்பு கூற வேண்டியவராகவும் காணப்பட்டார். இக் கட்டுப்பாடுகள் அனைத்தும் மாவட்ட அமைச்சரின் சுதந்திரமான செயற்பாட்டிற்கு இயல்பாகவே கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியிருந்தன. பாராளுமன்ற குழுவிலிருந்து மாவட்ட அமைச்சர் தெரிவு செய்யப்பட்டாலும் அவர் அமைச்சரவை சாராத அமைச்சர்களில் இருந்தே தெரிவு செய்யப்பட்டார். ஆனால் அபிவிருத்தி தொடர்பான சகல அதிகாரங்களும் அமைச்சரவை சார்ந்த அமைச்சர்களிடமே காணப்பட்டது.

இதனால் மாவட்ட அபிவிருத்தி தொடர்பான விடயங்களுக்கு மாவட்ட அமைச்சர் அமைச்சரவை சார்ந்த அமைச்சர்களில் தங்கியிருக்க வேண்டிய நிலையே இருந்தது. அதாவது எந்தவொரு அபிவிருத்தி செயற்பாடுகளையும் மாவட்ட அமைச்சர் தான் திட்டமிடும் விடயங்களை கூட மேற்கொள்ள முடியாது இருந்தன.

மொத்தத்தில் மக்களால் தெரிவு செய்யப்படாதவர்கள் கைகளிலேயே ஒட்டுமொத்த அதிகாரங்களும் குவிக்கப்பட்டிருந்தன. அதிகாரங்கள் பரவலாக்கப்படுவதற்குப் பதிலாக, அதிகாரங்கள் அனைத்தையும் பிடுங்கி மையப்படுத்தி தன்னகத்தே குவித்து வைத்துக் கொண்டது. அதை இனப் பிரச்சினைக்கு தீர்வு என்றது.

**கிராமோதய சபைகள்**

மாவட்ட அபிவிருத்திச் சபைகள் முறையில் மக்களுக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இடையே பெரிய இடைவெளி காணப்பட்டதால், மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கு மக்களின் ஈடுபாட்டைப் பெற்றுக் கொள்வதற்காக 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க மாவட்ட அபிவிருத்திச் சபைகள் சட்டத்தின் பிரிவு 17 இல் திருத்தம் செய்யப்பட்டு கிராமோதய சபைகள் நிறுவப்பட்டன. ஆனால் மக்களின் ஈடுபாடு அவர்கள் அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்றும் உத்தியோகபூர்வ ஒப்பந்தக்காரர்களாக மாறியது மட்டுமே.

வேறுபலனேதுங்கிடைக்கவில்லை. "கிராமோதய சபைகள் முறை" ஜனநாயகத் தன்மை கொண்டதும், செயற்றிறன் குறைந்த முறையாகவும் காணப்பட்டதுடன், பட்டின சபைகள், கிராம சபைகள் இல்லாதொழிக்கப்பட்ட பின்னர் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பக்கூடியதான வகையில் அமைந்திருக்கவுமில்லை. மேலும் இவை அரசியல் நோக்கங்களுடன் உருவாக்கப்பட்டதால் பல காரணங்களால் நீண்ட காலம் நிலைத்திருக்க முடியாமல் போனது.

**1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்**

உள்ளூராட்சி மன்றங்களில் முறையானதொரு உறுப்புரிமை முறைமை இல்லாதிருந்த காரணத்தினாலும், மாவட்ட அபிவிருத்திச் சபைகள் மற்றும் கிராமோதய சபைகளினால் குறித்த விடயங்கள் நிறைவேற்றப்படாத காரணத்தினாலும் பிரதேச சபைகள் சட்டம் கொண்டுவரப்பட்டது. இச் சட்டம் 1987.04.16 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது.

இச்சட்டம் தொடர்பாக பாராளுமன்றத்தில் விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டபோது, சிறந்ததொரு உள்ளூராட்சி முறையை உருவாக்குவதற்கும், அதற்குரிய உள்ளூராட்சிச் சேவைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் கிராமங்களிலுள்ள இளைஞர்களின் தலைமைத்துவம் அவசியமானதாகக் கருதப்பட்டது. பிரதேச சபைகளினூடாக அரசியற் பொறுப்புக்களை ஏற்று நடாத்துவதற்குரிய பயிற்சிகளை அவர்களுக்கு வழங்கும் நோக்குடன், இவ்வாறான நிறுவனக் கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டதெனக் கூறப்பட்டது.

மொறகொட ஆணைக்குழுவின் பரிந்துரையும் இதன் போது கவனத்திற் கொள்ளப்பட்டதாகக் கருதப்படுவதுடன், இதன் பிரகாரம் (பிரதேச செயலாளர்) உப அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் (1980க்கு முன்னர்) செயற்படுத்தப்பட்ட கிராம சபைகள் மற்றும் பட்டின சபைகள் ஆகிய இரண்டும் ஒரே பிரிவின் கீழ் அமையுமாறு, பிரதேச சபைகள் என்னும் பெயரில் புதிய கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. மேற்குறித்த கிராம சபைகள், பட்டின சபைகளின் அதிகாரங்கள் யாவும் பிரதேச சபைகளுக்குக் கையளிக்கப்பட்டன.

1987 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட சட்டத்திருத்தத்தின் படி இலங்கையில் 4 வகையான உள்ளூராட்சி அமைப்புக்கள் நிறுவப்பட்டன. அவை: மாநகரசபைகள், நகரசபைகள், பிரதேச சபைகள், மற்றும் கிராமோதய சபைகள் என்பனவாகும். கிராமோதய சபைகளுக்கான அங்கத்தவர் தெரிவு பொது மக்களின் வாக்கெடுப்பின் மூலமாக நடத்தப்படுவதில்லை.

குறித்த கிராம சேவகர் பிரிவில் கிராமசேவகரால் நடத்தப்படும் கூட்டத்தில் இதன் அங்கத்தவர்கள் ஓராண்டுக் கொருமுறை தெரிவு செய்யப்படுவர். அநேகமாக குறித்த கிராமோதயப் பிரிவில் காணப் படும் பதிவு செய்யப்பட்ட சமூக சேவை இயக்கங்களின் தலைவர்களே அங்கத்துவம் வகிப்பர். பொதுவாக மாநகர சபைகள், நகரசபைகள், பிரதேச சபைகள் என்பனவே உள்ளூராட்சிசபைகள் என அழைக்கப்படுகின்றன.

(தொடரும்...)

| உள்ளூராட்சி சபைகள் | தற்போதுள்ள சட்ட ஏற்பாடு |
|---|---|
| மாநகர சபை | 1988இல் மாநகர சபைகள் திருத்தச் சட்டமூலம் |
| நகர சபை | 1988இல் நகர சபைகள் திருத்தச் சட்டமூலம் |
| பிரதேச சபை | 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூநகரியின்...

பூநகரி பிரதேசத்தின் அபிவிருத்தியை உடன் துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

வடமாகாணத்திற்கு நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுப் பிற்பகல் பூநகரி பிரதேசத்திற்கு விஜயம் செய்தார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட பூநகரி நகர அபிவிருத்தித் திட்டத்தை மீளாய்வு செய்வதற்காக பூநகரி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலும் ஜனாதிபதி கலந்துகொண்டார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் பூநகரி நகர அபிவிருத்திக்காக 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, உரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை நடைமுறைப் படுத்துமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, சுற்றுலாத் துறையை மேம்படுத்துதல் மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தித் திட்டங்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றில் விசேட கவனம் செலுத்துமாறும் அறிவுறுத்தினார்.

அதன் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பூநகரி கோட்டையை பார்வையிட்டார். மேலும், பூநகரி பிரதேசத்தில் இயங்கிவரும் முந்திரி உற்பத்தி நிறுவனத்திற்கு ஜனாதிபதி விஜயம் செய்து அதன் செயற்பாடுகளையும் அவதானித்தார். (ம-7)

## 13ஆவது...

கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதுமானது என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

அவற்றில் மத்திய அரசாங்கம் தலையிடாது என்றும் அதேபோல் அதிகாரப் பகிர்வு என்பது ஒரு அரசியல் எண்ணக்கருவாக மாத்திரம் அன்றி, பொருளாதார அடிப்படையில் யதார்த்தமாக அமைய வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மாகாண மட்டத்தில் சுயாதீன பொருளாதாரத்தை உருவாக்குவது தொடர்பிலான மாதிரியை ஜப்பான், கொரியா, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ் போன்ற நாடுகளிடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## ஜனாதிபதியைச்...

விக்கிரமசிங்க தலைமையில் வன்னி மாவட்டங்களுக்குரிய மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் வவுனியாவில் நேற்று நடைபெற்றது.

இதன்போது காணமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சிலர் ஜனாதிபதியைச் சந்திப்பதற்காக நகர சபை வீதியூடாக உள்நுழைய முற்பட்டுள்ளனர்.

இதன்போது அவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தியதால் இரு பகுதியினருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வீதி ஓரமாக நின்று கறுப்பு துணிகளுடன் தமது பிள்ளைகளை கோரி கோசம் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது நீதிமன்ற கட்டளையைக் காட்டி அவர்களை அங்கிருந்து பொலிஸார் கலைந்து செல்லுமாறு வலியுறுத்தினர்.

எனினும் தாம் ஜனாதிபதியை சந்திக்க வந்துள்ளோம். அதற்கு வழி விடுமாறு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கோரியதுடன், கோசம் எழுப்பினர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்ட தாய் ஒருவரும், அவர்களுடன் இணைந்து அதனை காணொளி பதிவு செய்த யுவதி ஒருவரும் என இருவரை பொலிஸார் கைது செய்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்க தலைவி சிவானந்தன் ஜெனீற்றா மற்றும் மீரா ஜாஸ்மின் ஆகியவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர்.

இதனையடுத்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அங்கிருந்து கண்ணீருடன் கலைந்து சென்றனர். (ம-7,250)

## இலங்கையில்...

திருகோணமலை சம்பூர் பகுதியில் ஜல்லிக்கட்டு போட்டி தொடங்க உள்ளது. இந்தப் போட்டியில் 200 காளைகளும் 100க்கும் மேற்பட்ட மாடுபிடி வீரர்களும் பங்கேற்க உள்ளனர்.

கிழக்கு [illegible] தொண்டமான் தலைமையில் சுற்றுலாத்துறை சார்பில் இந்தப் பொங்கல் விழா ஒரு வார காலத்துக்கு கொண்டாடப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு தொடக்க விழாவாக இன்று ஜல்லிக்கட்டு போட்டி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வடக்கு...

வவுனியா மாவட்ட கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்ற வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கான விசேட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலேயே ஜனாதிபதி ரணில். விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் பொருளாதாரத்திற்கு 50 வீதத்திற்கும் அதிகமான பங்களிப்பை வழங்கும் மேல் மாகாணம் நாட்டு பொருளாதாரத்தின் இயந்திரமாக செயற்படுகின்றது என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, வடக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களையும் அதனுடன் இணைத்துக் கொண்டு ஐந்து பிரதான இயந்திரங்களுடன் நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்த எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களின் கல்வி, சுகாதாரம், மீள்குடியமர்த்தல், காணி, மின்சாரம், குடிநீர், சுற்றுலா, வனவள பாதுகாப்பு, மீன்பிடித் துறைகளில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டதோடு, சில பிரச்சினைகளுக்கான தீர்வுகளை ஜனாதிபதி அவ்விடத்திலேயே அறிவித்தார்.

வடக்கு,மேற்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்கள் இலங்கையின் தேசிய பொருளாதாரத்திற்கு பெருமளவான பங்களிப்பை வழங்கும் மாகாணங்களாக மேம்படுத்தப்பட வேண்டும்.

தற்போது நிதி பலமும் இருப்பதால் இடைநிறுத்தப்பட்ட வேலைத் திட்டங்களை மீள ஆரம்பிக்க முடியும். அதேபோல் வெளிநாட்டு நிதியில் முன்னெடுக்கப்படும் திட்டங்களை [illegible]வதற்கான உதவிகளும் கிடைக்கப் பெறவுள்ளன.

மேலும் வட மாகாணத்திடமிருந்து இந்நாட்டின் அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்பை பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. வட மாகாணத்திலிருந்து காற்று மற்றும் வெப்பநிலை காரணமாக மீளப்புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி தயாரிப்புக்கு அதிக வாய்ப்புகள் உள்ளன.

வட மாகாணத்தில் தயாரிக்கக்கூடிய மின்சாரத்தின் அளவை கணக்கிட்டு பார்க்கும்போது எஞ்சிய தொகையை இந்தியாவுக்கு விற்பனை செய்து பணம் பெறக்கூடிய நிலையும் உள்ளது. அதற்கான பேச்சுவார்த்தைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வட மாகாணத்தின் விவசாயிகள் திறமையும் செயற்றிறனும் கொண்டவர்கள். விவசாய நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் வட மாகாணத்தின் விவசாய நிலங்களை முகாமைத்துவம் செய்வதன் வாயிலாக ஏற்றுமதி விவசாய தொழிற்துறையை பலப்படுத்தலாம்" என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (ம-7)


லக்கி 7 VIP
திகதி 2024.01.05
சீட்டிழுப்பு இலக்கம் 0176
L 3 4 7 6 3 5 L
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2024.01.05
சீட்டிழுப்பு இலக்கம் - 1380
P 29 42 53 72 P
Double Chance 31357

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3592
சீட்டிழுப்பு திகதி 05.01.2024
U 18 19 41 65
U 12177
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.01.05
சீட்டிழுப்பு இலக்கம் 0659
கன்னி 08 24 32 44 கன்னி
29062 08

மஹஜன சம்பத
திகதி 2024/01/05
சீட்டிழுப்பு இலக்கம் 5350
Y 8 0 0 4 9 3
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 05/01/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1698
X 17 07 31 47 73
65284
www.nlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்
05.01.2024 வெற்றி வாரம் 058
P 9 2 0 9 4 5
25,670,943.20
55260
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2324 வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.01.05 தினம் வெள்ளிக்கிழமை
14 32 46 71 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,316,804.80
71987

சனிதா
திகதி 2024.01.05 வெற்றி வாரம் 4485 வர்ணம் செம்மஞ்சள்
11 34 48 73 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 69,077,570.80
38954
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SASIRI
வெற்றி வாரம் 424
சீட்டிழுப்பு திகதி 2024.01.05
பச்சை
26 45 46
08
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,030,200/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4036 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.01.05 தினம் வெள்ளிக்கிழமை
01 14 34 36
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,824,558.40
159112

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
C 13 10 12 67 75
1500
05.01.2024 வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 488,419,166.20
DLB தொலை பேசி : 011-2 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2150
சீட்டிழுப்பு திகதி : 2024.01.05
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.81,316,682.40
ADA KOTIPATHI
04 08 71 74 G
904111


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-8089)




Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777



## வீடு விற்பனைக்கு

அரியாலை மாம்பழம் சந்திக்கு அருகாமையில் 2 3/4 பரப்பளவைக் கொண்ட மூன்று அறைகள், முழுவதும் மார்பிள் பதிக்கப்பட்ட அழகிய வீடு விற்பனைக்கு உண்டு. (18432)

077 664 8287


## ஏலம் இன்று

பருத்தித்துறை நீதிமன்றத்தினால் வாகனங்கள் இன்று சனிக்கிழமை ஏலம் விடப்பட உள்ளன.

41 மோட்டார் சைக்கிள், இரண்டு முச்சக்கர வண்டி, இரண்டு துவிச்சக்கர வண்டி, இருசக்கர உழவு இயந்திரம் ஒன்று என்பன வற்றை பருத்தித் துறை நீதி மன்ற வளாகத் தில் காலை 9.00 மணி முதல் பார்வையிட முடியும் என்பதோடு 10.00 மணிக்கு ஏலம் ஆரம்பமாகும். (ம-7.60)


## பொங்கல் அகப்பை விற்பனைக்கு

தைப்பொங்கல் வியாபாரத்தை சிறப்பிக்க இன்றே முந்துங்கள்

- அகப்பைகள்
- விளக்குமாறு
- திருவுபலகை
- இருபலகை
- ரொட்டித் தட்டு, சுளகு



மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

077 210 5286 (18501)



## ஆசிரியர் தேவை

இடம் : தெல்லிப்பளை
பாடங்கள் : தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்

தொடர்புகளுக்கு :

077 834 3666 (18505)



## CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-8089)
0777-068-777
49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம்
V2 TRAVELS



## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | | |
|---|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - | 272 /= | Max 3Kg |
| 1 Kg றவை | - | 288 /= | |
| 1 Kg கோதுமை மா | - | 183 /= | |
| 1 Kg Prima கோதுமை | - | 186 /= | |
| 1 Kg அரிசி மா | - | 198 /= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - | 292 /= | Max 2Kg |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - | 423 /= | |
| 1 Kg தீட்டல் பச்சை அரிசி | - | 165 /= | |
| 1 Kg சம்பா அரிசி | - | 230 /= | Max 3Kg |
| 400g sustagen சஸ்ரயன் | - | 3410 /= | ~~3900 /=~~ |
| 180ml Chik சம்போ | - | 370 /= | ~~430 /=~~ |
| 330g கோல்ட் மாரி பிஸ்கட் | - | 270 /= | ~~330 /=~~ |
| 500ml Vim Liquid | - | 380 /= | ~~425 /=~~ |
| 70g Baby Soap | - | 112 /= | ~~145 /=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - | 50 /= | ~~80 /=~~ |
| 1 Kg Sunlight பவுடர் | - | 345 /= | Max 2 Packet |
| 1 Kg வெள்ளை நாடு | - | 212 /= | |

1028/=




~~1080/-~~

யோக்கட் மொத்த கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்
தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30 (18518)



யாழ் நகரில் தங்க நகை வியாபாரத்தில் 37 வருடம் அனுபவம் வாய்ந்த நாம் எமது வாடிக்கையாளர்களின் வேண்டுகோளிற்கிணங்க



எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு
**தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத்தள்ளுபடி வழங்கவுள்ளோம்.**

- ♦ 22 கரட் ஆபரணங்களுக்கு செய்கூலி, சேதாரமின்றிய விலையில் வழங்கப்படும்.
- ♦ அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் 16.01.2024 ஆம் திகதி வரையில் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.
- ♦ அனைத்து ஆபரணங்களுக்கும் தரத்தை உறுதிசெய்யும் தரச்சான்றும் வழங்கப்படும்.
- ♦ தங்கத்தின் அன்றைய தாளிற்கான விலை நிலைவரத்தின்படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும்.

## சிறிராம் ஜுவல்லர்ஸ்

22 கரட் தங்க நகைகளின் சாம்ராஜ்ஜம் (C-8087)



## SB TRAVELS AND TOURS PVT LTD

No.198, Kasthuriyar Road, Jaffna.


**Visa Arrangements and Flight Tickets**

Malaysia, Dubai, Thailand, China, Vietnam, India E-visa

போன்ற ஆசிய நாடுகளுக்கான விசாக்களும் மற்றும் சகல நாடுகளுக்குமான விமான ரிக்கெட்டுக்களையும் மிகவும் குறைந்த விலையில் வாடிக்கையாளர்களுக்கு ஏற்ற விதத்தில் எம்மூடாக பெற்றுக்கொள்ள முடியும்.

Hotline : 075 555 9932
Tel : 021 222 8555/ 021 222 9555
Jaffna No : 076 691 1082, 83
Colombo 15 : 077 108 3482, 83
Colombo 13 : 076 691 1089
Email : sbtravelsjaffna@gmail.com (C-8088)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு




கடந்த 07.12.2023 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் குழந்தைவேல் சுசிகரன் (வவா)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று முன்தினம் ( 04.01.2024 ) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று ( 06.01.2024 ) **சனிக்கிழமை** பகல் 11.00 மணியளவில் **அன்னாரின் சகோதரி இல்லத்தில்** நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குட்செட் வீதி,
கோண்டாவில். (18484)

077 157 7969
077 285 0552

இங்ஙனம்
குடும்பத்தினர்


மருத்துவராவது உங்கள் கனவா?

STUDY MEDICINE (MBBS) IN CHINA



சீனாவுக்கு சென்று மருத்துவம் கற்றுக்கொள்ள ஓர் அரிய வாய்ப்பு.

- இலங்கையால் (SLMC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள்.
- குறைந்த கற்கைநெறிக் கட்டணம்.
- முழுமையாக ஆங்கில மொழி மூலப் பயிற்சிகள்.

பதிவுகள் மார்ச் மற்றும் செப்டம்பர் மாதங்களில்

BYF EDUCATION (PVT) LTD.

தொடர்பு : Dr. தேவா (18438)
Mob : 076 764 6888
Tel : 011 588 2896
Whatsapp : 077 2177 995

www.byfedulk.com
byfeducation


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org